Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction,
K.K.S Road,
Jaffna,
Sri Lanka
021-225170
(சி-179)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 5 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 15 (21.11.2002) வியாழக்கிழமை இதழ் : 52



நேற்றைய கூட்டத்தில் சாந்த கொட்டேகொடவும், தளபதி கருணாவும்.

# மட்டு. மாவட்டக் கச்சேரியிலிருந்து படையினர் வெளியேற இணக்கம்

## நேற்றைய உபகுழுக் கூட்டத்தில் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டச் செயலகம், அரசடி நூலகம் என்பவற்றிலிருந்து உடனடியாக விலக இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற மட்டு - அம்பாறை பாதுகாப்பு மற்றும் மீளக் குடியமர்வு உபகுழுக்கூட்டத்தில் இந்த இணக்க நிலை ஏற்பட்டது.

மேற்படி உபகுழுக் கூட்டம் நேற்றுக்காலை 9.30 மணியிலிருந்து 11.30 மணிவரை வவுணதீவு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் தரப்பில் கிழக்கு மாகாண மூத்த தளபதி கேணல் கருணா, மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஷ், ஜெயந்தன் படையணித் தளபதி ராம், மகளிர் படையணித் தளபதி நிலாவினி, மட்டு- அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டு.-அம்பாறை மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் பானுகா, மருத்துவத்துறைப் பொறுப்பாளர் வாமனன் ஆகியோரும், இராணுவத் தரப்பில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, கடற்படை ரியர் அட்மிரல் எஸ்.பி. வீரசேகர,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியை வெளியேறக் கோரி

# நெடுந்தீவில் இன்று தொடக்கம் சுழற்சிமுறை உண்ணாவிரதம்

## மருதனார்மடத்தில் தோட்டத்தில் ஓடிய பெற்றோல் வெள்ளம்!

மருதனார்மடம் அருகே மானிப்பாய் வீதியில் நேற்றுக்காலை பாரிய பெற்றோல் பௌசர் ஒன்று வீதியை விட்டு விலகிக் குடைசாய்ந்ததில் பெருமளவிலான பெற்றோல் வீதியில் வெள்ளமாகப் பாய்ந்தது. சிந்திய பெற்றோலை இப்பகுதியில் உள்ள மக்கள் கொள்கலன்களில் சேகரித்ததையும் காணமுடிந்தது.

முப்பதாயிரம் லீற்றர் பெற்றோலை ஏற்றிவந்த இந்தப்பாரிய பௌசர் உரும்பிராய் - மருதனார்மடத்துக்கிடையில் பழைய ட்ரான்ஸ்போமர் பகுதியில் லொறி ஒன்றுக்கு வழி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் தரப்பில் ஏற்பாடு

(நெடுந்தீவு)

**நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேற வேண்டுமெனக் கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று இன்று முதல் அங்கு மேற்கொள்ளப்படவுள்ளது.**

உண்ணாவிரத ஏற்பாடுகளை நெடுந்தீவிலுள்ள பொதுமக்கள் மேற்கொண்டு வருகின்றனர். உண்ணாவிரதப் போராட்டத்திற்கான பந்தல் அமைக்கும் முயற்சியில் இம்மக்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

நெடுந்தீவில் இதுவரை பணியிலிருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பொதுமக்கள் மீதான இவரது வேண்டத்தகாத மிரட்டல் பாணியிலான போக்குக் குறித்து பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வந்தது

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இதில நிக்கிறதவிட மருதனார் மடத்துக்குப் போயிருந்தா கொஞ்சப் பெற்றோலாவது எடுத்திருக்கலாம்....



நெடுந்தீவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள்

## பல்கலைக்கழக மாணவன் உட்பட கைதான மூவரும் விடுதலை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நேற்றுக்காலை பொலிசாரால் கைது செய்யபட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மூவர், நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டனர். நெடுந்தீவு வைத்தியசாலைக்கு இவர்கள் சென்று கொண்டிருந்தபோதே கைதானதாகத் தெரியவருகிறது.

யாழ்.பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவன் சு.சந்திரமோகன் (வயது 22) மற்றும் சு.சாந்தன் (வயது 26), கு.ஜனேந்திரன் (வயது 21) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் நேற்று மாலை 3.30 மணியளவில் பொலிசாரால் விடுவிக்கப்பட்டனர். (112)

## புலிகளின் அரசியல் பிரிவினர் நெடுந்தீவுக்குச் சென்றனர்!

(நெடுந்தீவு)

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினர் பாப்பா தலைமையில் நேற்று நெடுந்தீவு சென்றனர். இவர்கள் அங்குள்ள நிலைமைகள் குறித்து பொது மக்களுடன் கலந்துரையாடினர். இவர்களுடன் மனித உரிமைகள் குழுவினரும், தீவக நலன் காப்பக உறுப்பினர்களும் நெடுந்தீவு சென்றுள்ளனர்.

இதேவேளை, நெடுந்தீவில் பொதுமக்கள் மேற்கொள்ளும் போராட்டத்தை வீடியோப்படம் பிடித்துக் கொண்டிருந்த புலிகளின் புகைப்படப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர் பொலிசாரால் மிரட்டப்பட்டார். இவரை பொலிசார் நெருங்கி அவரின் வீடியோ கமராவைப்பறிக்க முயன்றபோது அம்முயற்சியை பொது மக்கள் இடையில் புகுந்து தடுத்து நிறுத்தியுள்ளனர். (112)

## மாவீரர் எழுச்சிவாரம் இன்றுமுதல் ஆரம்பம்

தேச விடுதலைக்காக தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களை நினைவு கூரும் வகையில் அனுஷ்டிக்கப்படும் மாவீரர் எழுச்சி வாரம் இன்றுமுதல் ஆரம்பமாகின்றது.

வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் இம்மாவீரர் வாரம் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மாவீரர் வாரத்துக்கான முன்னேற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்துப் பொது அமைப்புக்களும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பொதுமக்களும் கடந்த வாரத்திலிருந்தே மாவீரர் வாரத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்து விட்டனர். இவற்றைவிட யாழ்.குடாநாட்டில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோ மாநாட்டில் புலிகள்தரப்பில் 8 பேர்!

ஒஸ்லோ மாநாட்டில், விடுதலைப் புலிகளின் தரப்பில் 8 பேர் பங்குபற்றவுள்ளதாக நோர்வேயிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திருமதி அடேல்பாலசிங்கம், வே.பாலகுமாரன், பூவண்ணன், ஜோய் மகேஸ்வரன், புலித்தேவன், தொல்காப்பியன் ஆகியோரே இக்குழுவில் இடம் பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## ஸ்ரீதர் தியேட்டர் முன் இன்று அடையாள மறியற் போர்!

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 10 மணி முதல் 2 மணி வரை ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டத்தலைமை செயலகமான ஸ்ரீதர் தியேட்டர் கட்டடம் முன்பாக அடையாள மறியல் போர் ஒன்று நடைபெறவுள்ளது. இதற்கான தீர்மானம் நேற்றுமாலை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் கூட்டத்தின் இறுதியில் எடுக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019
(சி-148)

# தமிழ் இளைஞனின் துயரங்களை சித்தரிக்கும் "புத்தரின் பெயரால்" ஆங்கிலத் திரைப்படம்

## ஒஸ்லோ உலகத் திரைப்பட விழாவில் காட்சி

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நடைபெறும் உலகத்திரைப்பட விழாவில், தமிழ் இளைஞன் ஒருவனையும் அவனது






குடும்பத்தையும் கருவாக வைத்து உருவாக்கப்பட்ட "புத்தரின் பெயரால்" என்ற திரைப்படம் திரையிடப் பட்டுள்ளது.

ஒஸ்லோவில் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமான இத்திரைப்பட விழாவிலேயே "புத்தரின் பெயரால்" என்ற திரைப்படமும் திரையிடப்பட்டுள்ளது. இத்திரைப்படம் கேரளா, தமிழ்நாடு, பிரிட்டன் ஆகிய இடங்களில் படமாக்கப்பட்டுள்ளது.

சிவா என்ற ஈழத்தமிழ் இளைஞன் நாட்டைவிட்டுத் தப்பி ஓடி லண்டனில் தஞ்சமடைவதையும், அவனும் அவனது குடும்பத்தினரும் எதிர்கொள்ளும் துயரங்கள், மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் தொடர்பாகவும் இத்திரைப் படத்தில் காட்சிப்படுத்தபபட்டுள்ளது.

அத்துடன் சமாதானத்தை வலியுறுத்தும் துயரங்களைச் சித்தரிக்கும் இத்திரைப்படத்தை ராஜேஸ் டச்ரிவர் என்பவர் இயக்கியுள்ளார்.

# முழு ஆயுத விபரங்களையும் ஈராக் வழங்கத் தயார் !



(பாக்தாத்)

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதனைக்கு தனது ஆயுதங்களின் முழு விபரங்களையும் கொடுக்கவுள்ளதாக உறுதியளித்ததோடு, கடந்த நான்கு வருடங்களில் தாம் எவ்வித இரசாயன, உயிரியல் மற்றும் அணுவாயுதங்களையும் உற்பத்தி செய்யவில்லை என்பதனை உறுதிப்படுத்தவுள்ளதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் பிரேரணைகளுக்கு ஏற்ப மிகப் பெரியளவிலான ஆயுதப் பரிசோதனை ஈராக் மீது எதிர்வரும் வாரம் ஆரம்பமாகவுள்ள அதே வேளை, பராகுவேயில் நேட்டோ கூட்டத் தொடரில் - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈராக் மீதான தனது கடுங்கொள்கைக்கு ஆதரவாக, துருக்கி ஜனாதிபதி மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் ஆகியோர் உட்படப் பலருடன் தனக்கு ஆதரவு திரட்டும் வகையில் செயற்பட்டு வருகின்றார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பிரேரணைக்கு ஏற்ப, ஈராக் 30 நாட்களுக்குள் தன்னிடமுள்ள ஆயுதங்கள் தொடர்பான விபரங்களை ஆயுதப்பரிசோதனைக் குழுவிற்கு கொடுக்க வேண்டும் என வரையறுத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, பன்னிரண்டு ஆயுதப் பரிசோதகர்கள் அடங்கிய குழு இம்மாத 25ம் திகதி ஈராக் சென்று 27ம் திகதி ஆயுதப்பரிசோதனையை நடாத்தத்தொடங்குவார்கள் எனறும் ஜனவரி 27ம்திகதி பாதுகாப்புச் சபையிடம் ஆயுதப்பரிசோதகர்கள் தாம் நடாத்திய ஆயுதப பரிசோதனை பற்றிய முதலாவது அறிக்கையை சமர்ப்பிப்பர் எனவும் நிகழ்ச்சி திட்டமிடப்பட்டுள்ளது.

ஆப்கானில் முஹமட் அலி





காஸாவில் பலஸ்தீன இளைஞன் ஒருவரை துப்பாக்கி முனையில் மிரட்டும் இஸ்ரேலியச் சிப்பாய்.

# விளையாட்டு

## மூன்று விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா வெற்றி



(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேற்று முன்தினம் நடந்து முடிந்த டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. தென்னாபிரிக்க அணியினர் அவுஸ்திரேலியாவுடன் 4-0 என்ற நிலையில் தோல்வி கண்ட உணர்விலிருந்து தற்பொழுது வெற்றியை நோக்கி முன்னேறியிருப்பதாக தென்னாபிரிக்க அணித் தலைவர் பொலொக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - 2003 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண போட்டிகளும் தென்னாபிரிக்காவில் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.


# கண்ணீர் அஞ்சலி

திருகோணமலை நிலாவெளியைப் பிறப்பிடமாகவும், கதிரிப்பாயை வசிப்பிடமாகவும், தற்பொழுது மூன்றாம் சந்தி கெருடாவிலில் வசித்தவருமாகிய

**கணபதிப்பிள்ளை தம்பையா**

19.11.2002இல் சிவபதமடைந்தார். அன்னாரின் ஈமக்கிரியைகள் தொண்டைமானாறு காட்டுப்புலம் மயானத்தில் 20.11.2002 இல் 11மணிக்கு நடைபெற்றது. அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும், சசிகலா தேவியின் அன்புத் தந்தையுமாவார்.

தகவல்-
ந.குகனேந்திரா ஐயர். (மருமகன்)

(சி/193)

**"GTZ international services" is commencing the rehabilitation of schools in the former conflict zones in Sri Lanka on behalf of the European community**

Therefore it requires the following experienced and English speaking staff

- Civil Engineers/ Architects
- Administrator & Logistic Assistant
- Secretary with computer literacy
- Driver

**Applications should reach the GTZ Office at 11, Kandy Road, Jaffna before 29.11.2002.**

'GTZ - சர்வதேச சேவைகள் பிரிவு'

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஐரோப்பிய சமூகத்தின் சார்பில் பாடசாலைகள் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கின்றது.

அதற்காக கீழ்வரும் பதவிகளுக்கு வேலை அனுபவமும் ஆங்கிலத்தில் பரீச்சயம் உள்ளவர்களும் தேவைப்படுகிறார்கள்.

- கட்டடப் பொறியியலாளர்கள்/ கட்டடக் கலைஞர்.
- நிர்வாக உத்தியோகத்தர்
- காரியதரிசி (கம்பியூட்டர் அறிவுடன்)
- சாரதி

விண்ணப்பங்கள் யாவும் 29.11.2002 இற்கு முன்னதாக GTZ - காரியாலயம், இல.11, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(சி/195)


# இன்றைய நாள் இனிய நாள்

**21-11-2002 - வியாழக்கிழமை**

**சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் - 05ஆம் திகதி**

*திதி* :- அபரபட்ச துதியை
*நட்சத்திரம்* :- ரோகிணி,இரவு 10.05 வரை அதன்மேல் மிருகசீரிடம்
*ராகுகாலம்* :- 1.40 - 3.10
*சுபநேரம்* :- 7.40 - 9.10

**மேடம்** :- உடனலம் சமம், சேமிக்கும் சிந்தனை வராது, பெண்கள் மௌனமாக இருந்தால் நன்று, சிந்திப்பதில் பிரயோசனம் இல்லை, கல்வி நிலை சமம், வியாபாரம் முன்னேற்றம்

**இடபம்** :- உடனலம், உளநலம் நன்று, பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபாடு, உணவினால் உடல் பூரிப்பு, நண்பர்கள், உறவினர்கள் மகிழ்ச்சி, கல்விநிலை முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, கர்வநிலை உருவாதல் அதனால் செலவு, செலவினால் கவலை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- உடனலம், உளநலம் நன்று, பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபாடு, புகழ், மகளிர் உளப்பூரிப்பு, கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை சமம்.

**சிங்கம்** :- உடனலம், உளநலம் நன்று, பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபாடு, செய்தொழில் விருத்தி, தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, எதிரிகளால் தொல்லை, தன்னையறியாத பயவுணர்வு, கருத்து முரண்பாடு, கல்விமுன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**துலாம்** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, வீண்செலவு, காயமேற்படல், பிரயாணம் தவிர்த்தல் வேண்டும், புதிய ஒப்பந்தங்கள் எழுதுவது நன்றல்ல.

**விருச்சிகம்** :- உடனலம், உளநலம் நன்று, இல்லத்தில் மகிழ்ச்சி, விருந்தினர் நண்பர் வருகை, உணவினால் உடல் பூரிப்பு, மகளிர் உளப்பூரிப்பு, கல்விமுன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

**தனு** :- உடனலம், உளநலம் நன்று, கடன்வரவு, புதிய கடன் வசதி, பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபாடு, கல்வி முன்னேற்றம், வியாபார சமநிலை.

**மகரம்** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, புத்திரரால் செலவு, பிரயாணத்தடை, தாழ்வு மனப்பான்மை, கல்விமுன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- உடனலக்குறைவு, உளநலக்குறைவு, வீட்டிலுள்ள மகளிர் உடனலக்குறைவு, கொடுக்கல் வாங்கல் சிக்கல், வீண் அலைச்சல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- உடனலம், உளநலம் நன்று, முயற்சி வெற்றி, பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபாடு, ஆடை ஆபரண பலன், கல்வி சமநிலை, வியாபார முன்னேற்றம்.


**ராஜா** யாழ்ப்பாணம்.



தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.00
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
கமல், சிம்ரன் நடித்த
**பஞ்ச தந்திரம்**
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
**UNIVERSAL SOLDIER**
(சி-139)

# அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் குறைந்தது ஒரு தமிழ்ப் பொலிஸ் அதிகாரி

## நியமிக்க உள்துறை அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்துப் பொலிஸ நிலையங்களிலும் - தலா ஒவ்வொரு தமிழ்ப் பொலிஸ் அதிகாரியையாவது நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

உள்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இன ஒற்றுமையையும், புரிந்துணாவையும் ஏற்படுத்துகின்ற வகையில் அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்கள் மொழிபுரியாமல் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக உள்துறை அமைச்சுக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு முதற்கட்டமாக பொலிஸ் நிலையங்களில் ஒரு தமிழ்ப் பொலிஸ் அதிகாரியையாவது நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸ் நிலையங்களில் பெண்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு பெண் பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் சிங்களவர் குடியேற்றம் தியவதன நிலமே கோருகின்றார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் சிங்கள மக்கள் பூர்வீகமாக இருந்த பகுதிகளில் அவர்களை மீளக்குடியேற்ற வழிவகைசெய்யுமாறு தலதா மாளிகை தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரட்ண, புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவைக் கேட்டுள்ளார்.

1977 இற்கு முன்னர் சிங்கள மக்கள் வடக்கு- கிழக்கில் வாழ்ந்த தொகை விபரங்களை தம்மால் சேகரித்துத்தர முடியும் எனவும் அவா கூறியுள்ளார்.

## வரணியில் குளத்தில் மூழ்கி இளைஞர் மரணம்

(வரணி)

வரணி இடைக்குறிச்சி பகுதியில் உள்ள குளத்தில் குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணமானார்.

குளத்தில் குளித்துக் கொண்டிருக்கும் போது "வலி" ஏற்பட்டதாலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது. இடைக்குறிச்சியைச் சேர்ந்த முருகர் கோகுலன் (வயது19) என்பவரே உயிரிழந்தவராவார்.

(27)

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27



மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சகத்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்க சக்தியாக அமைந்து விட்டது

வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

## மாவீரர் தம் ஈகமும், வீரமும் என்றுமே போற்றத்தக்கவை

தமது இன்னுயிரை ஈந்து தமிழீழ விடுதலைப்போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும், ஈகங்களும், அருஞ் செயல்களும், மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானதுதான் தமிழீழ மாவீரர் நாள்.

தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து, நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்து விட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரரையும் தனித்தனியாக ஆண்டு தோறும் அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூர இயலாது என்ற நிலையில் அனைவரையும் ஒரே நாளில் நினைவுகூரத்தக்கதாக தமிழீழ விடுதலைப் போரில் முதற்களச் சாவடைந்த இயக்க வீரன் லெப்ரினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவு நாளான நவம்பர் 27ஆம் நாளைப் பொதுவான நாளாகத் தேர்ந்தெடுத்த எமது தலைவர் 1989ஆம் ஆண்டில் தமிழீழ மாவீரர் நாளை அறிவித்தார்.

விடுதலைப் போராட்டத்தில் உலகம் வியக்கும் வகையிலே புதிய வரலாறு படைத்த புதுமை சேர்த்து நிற்கும் எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் மண் மீட்புப் போரிலே பல வெற்றிகளைக் குவித்து வரும் அதே நேரம், நாட்டை எல்லாத் துறைகளிலும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைத் தீட்டி வழிகாட்டி இயங்கி வருவதோடு, தூய்மையான தேசிய விடுதலைப் போரை வீறோடு நடாத்தி வீரச் சாவை தழுவிய மாவீரர்களைப் போற்றி நினைவில் நிறுத்தவும், அவர்களது பெற்றோரும் , குடும்பத்தினரும் அல்லலுறும் நிலையை மாற்றவுமெனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றார்.

- தமிழீழ மாவீரர் பணிமனை

### - பொலிசாரும் - கடற்படையினரும் -

# போராட்டத்தில் ஈடுபடும் பொதுமக்களை அச்சுறுத்துவது அமைதிக்குப் பாதகம்!

## நடவடிக்கை எடுக்குமாறு தீவக மக்கள் நலன்காப்பகம் கோரிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களுக்கு ஆதரவாகப் போராட்டம் நடத்துகின்ற தீவக மக்களை துறையூரிலும், சரவணைச் சந்தியிலும் கடற்படையினரும் பொலிசாரும் அச்சுறுத்தியுள்ளனர். இச்செயல்கள் நடைமுறையிலுள்ள சமாதான சூழலைப் பாதிக்கும் என்பதால் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என தீவக மக்கள் நலன் காப்பகம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீண்டகாலமாக நெடுந்தீவு மக்களை அச்சுறுத்தியும் துன்புறுத்தியும் வந்த ஈ.பி.டி.பியினரை அம்மக்கள் அவ்விடத்தைவிட்டு முற்றாக வெளியேற்றி இருந்தனர். இவர்கள் தற்போது மீண்டும் அதன் ஆள் அரவம் அற்ற வேளையில் -சிறிலங்கா காவல்துறையினர், கடற்படையினர் துணையுடன் தரையிறக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை அப்பகுதியை விட்டு வெளியேறக் கோரியும், அப்பகுதியில் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கவும் வேண்டி கடந்த 16 ஆம் திகதி இரவு எமது தீவகமக்கள் நலன காப்பகத்தினர் தங்களை நேரில் சந்தித்து நிலைமையை எடுத்துச் கூறி அது தொடர்பாக ஒரு அறிக்கையையும் கையளித்து இருந்தோம். இது தொடர்பாக எங்களுக்கு எந்தவிதமான சாதகமான எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

இது தொடர்பாக நெடுந்தீவு மக்கள் அன்று தொடக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அது தவிர, 18 ஆம் திகதி அப்பாவி மக்கள் மீது காவல்துறையினர் சுட்டதில் மக்கள் காயமடைந்துள்ளனர். இதன் காரணமாக நெடுந்தீவு மக்களுக்கு முழு ஆதரவை தெரிவித்து தீவகத்தின் மற்றைய பகுதி பொதுமக்கள், பொது அமைப்புகள் சேர்ந்து 18 ஆம் திகதியில் இருந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனைத் தாங்களும் அறிவீர்கள்.

தாங்கள் இவ்விடயத்தில் சாதகமான முடிவுகளை மேற்கொள்ளத் தவறினால், தற்போது பல விட்டுக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சமாதானச சூழ்நிலை பாதிப்புக்குள்ளாக நேரிடும். தனிமைப்படுத்தப்பட்டுள்ள நெடுந்தீவு மக்களின் கோரிக்கையை வலியுறுத்தி, தீவகப்பகுதியில் அகிம்சை ரீதியான வழி மறிப்புப் போராட்டம் நடைபெறும்வேளையில் தீவகத்தில் உள்ள கடற்படையினரும், காவல்துறையினரும் மக்களை அச்சுறுத்தி செயற்பட்டு வருகின்றனர்.

மக்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் தற்போது நடைமுறையிலுள்ள சமாதானச் சூழ்நிலையைப் பாதிக்கும். ஆகவே, இது தொடர்பாக தாங்கள் ஏற்றதொரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று எமது தீவக மக்கள் சார்பாக, தீவக மக்கள் நலன்காப்பகம் மிக வினயத்துடன் கேட்டுக்கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சர்வதேச சமூகத்திற்கு

## சமாதான முன்னெடுப்பை காட்டுவதே ஒஸ்லோ கூட்டம்

*அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு*



(கொழும்பு நிருபர்)

ஒஸ்லோவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில்- நிதி திரட்டப்படும் என்பதை விடவும், அரசாங்கமும் புலிகளும் இணைந்து சமாதான முன்னெடுப்புக்களில் பங்குபற்றுகின்றனர் என்பதைச் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்துவதே முதன்மையான பணியாக இருக்கும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு செய்தி ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் இணைந்து- அமைதி முயற்சிகளில் ஈடுபடுவதை சர்வதேசம் வரவேற்பதாகவும், அதன் வெளிப்பாடாக பெரும் உதவிகள் கிடைக்கப்பெறும் என்றும் அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டார்.

# சந்திரிகாவின் ஆண்டு விழாவுக்கு மூன்று கோடி ரூபா செலவு!

## நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்படும்



(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்று 8ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்கு 3 கோடி ரூபாவிற்கு மேல் செலவு செய்யப்பட்டது பற்றி நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணியும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பிரஸ்தாபிக்க இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறைவு விழா பொதுசன ஐக்கிய முன்னணியின் அதிகாரத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபை, பிரதேசசபை போன்றவற்றிலும் கொண்டாடப்பட்டது.

நாடு பொருளாதார ரீதியில் தத்தளித்துக் கொண்டு இருக்கும் இந்நேரத்தில், இவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப உள்ளதாகவும் ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

# டிசம்பர் 5 இற்கு பின் புதிய அரசு அமையும்!

## மைத்திரிபால நம்பிக்கை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிறைவேற்று அதிகாரம் என்ற முக்கிய தந்திரோபாயத்தின் மூலம் - வரும் டிசம்பர் 5ஆம் திகதிக்குப் பின்னர் புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான பலத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி வெளிக்காட்டுமென - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

கொழும்பில் இது பற்றி செய்தியாளர்களிடம் பேசிய அவர்-

19வது திருத்தச் சட்டத்தின் மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும்வரையில் சிங்கக் குட்டிகளாக நடமாடிய ஐக்கிய தேசிய முன்னணியினர் இப்போது அடங்கிப் போய் விட்டார்களென்றும் அவர் கூறினார்.

## றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.57 |
| சுபஹ் | 5.12 |
| உதயம் | 6.32 |
| லுஹர் | 12.27 |
| அஸர் | 3.49 |
| ம.ீரிப் | 6.20 |
| இஷா | 7.33 |

## வடமராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேட கூட்டம்

வடமராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம் நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

அன்றைய தினம் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

# மேசன் தொழிலாளர்களுக்கு கிளிநொச்சியில் விசேட பயிற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாயிரம் மேசன் திறன் தொழிலாளர்கள் உருவாக்கப்படவுள்ளனர்.

யுத்தத்தால் சிதைந்து போன வன்னிப்பகுதியை மீள் நிர்மாணம் செய்வதற்கும், புதிய நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கும் வசதியாக மேற்படி திறன் தொழிலாளர்கள் விசேட பயிற்சி மூலம் உருவாக்கப்படவுள்ளனர்.

கிளிநொச்சி அரசசெயலகம், மேற்படி விசேட பயிற்சித்திட்டத்தின மூலம் திறன்மிக்க மேசன் தொழிலாளர்களை உருவாக்குவதற்கான விசேட செயற்திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இப்பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மூன்று ஆண்டுகளில் சுமார் இரண்டாயிரம் திறன்மிக்க மேசன் தொழிலாளர்களை மேற்படி பயிற்சி மூலம் உருவாக்க முடியும் என்று கிளிநொச்சி அரச செயலகம் நம்புகிறது.

வன்னிப்பிரதேசத்தில் தற்போது மேசன் தொழிலாளர்கள் மிகவும் பற்றாக்குறையாக இருப்பதால் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய நிர்மாணப் பணிகளைப் பெரிதும் தாமதமடையச் செய்யும் இவ்வாறான நிலைமையை தவிர்க்கும் முகமாகவே மேற்படி விசேட செயற்திட்டத்தை கிளிநொச்சி செயலகம் மேற்கொள்ளவிருக்கின்றது.

இதேபோல திறன்மிக்க தச்சுத் தொழிலாளர்களையும் பயிற்சி மூலம் உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கான விசேட பயிற்சித்திட்டமும் மிகவிரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(க) (லி)

## உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு - கிழக்கு மாகாண சபை,

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம்.

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.

### பிரதித் திட்டப் பணிப்பாளர் பதவி

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட முகாமைத்துவப்படுத்தும் பிரிவில் உள்ள பிரதித் திட்டப் பணிப்பாளருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரர் 40 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். 55 வயதுக்கு குறைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். நியமனங்கள் திருப்திகரமான சேவையினப்படிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கக்கூடிய மூன்று வருட ஒப்பந்த அடிப்படையிலாகும். அவ்வொப்பந்தம் திருப்தியினடிப்படையில் மேலும் நீடிக்கப்படும். திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகளவு பயணம் செய்ய வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 03.12.2002 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வட க்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) *இல. 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை* என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். அரச திணைக்களம்/அரச கூட்டுத்தாபனங்கள்/சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

### தெரிவு செய்யப்படும் முறை

நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

### சம்பளம்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2000.12.26ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10இன் 04ஆம் மற்றும் 05ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

### கடமைகளும் பொறுப்புகளும்

விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப் பணிப்பாளருக்கு உதவ வேண்டும்.

★ திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்று மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.

★ திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளை திறமையாக ஏற்பாடு செய்தல் மற்றும் விருத்தி செய்தல் திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

★ நடைமுறைப்படுத்தலின்போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.

★ திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி முகவரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்திப் பேணி வரவேண்டும்.

★ திட்டப்பணிப்பாளரின் வேண்டுகோளின்படி வழங்கல் ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

### தேவையான தகைமையும் அனுபவமும்

பொறியியல், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம், வியாபார நிர்வாகம்/முகாமைத்துவம், கணக்கியல் அல்லது வேறு ஏதாவது துறையில் பட்டமொன்றுடன் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரேஷ்ட முகாமைத்துவத் தரத்தில் 08 வருடங்களுடன் 12 வருட அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

**அல்லது**

குறிப்பிட்ட துறையில் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமை (கலைமாணி/ டிப்ளோமா) அல்லது குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் கூட்டு அங்கத்துவத்துடன் வெளிநாட்டு நிதி முகவரகங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் 05 வருடங்கள் உட்பட 08 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### தொழில்சார் திறமைகள்

☆ சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கான திறமை
☆ திட்டத்தின் நீண்டகால நீடித்த தன்மையை உறுதி செய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.
☆ பலதரப்பட்ட ஒழுக்காற்றுக் குழுக்களின் வேலைகளைத் திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்லும் திறமை.

☆ திட்ட் நடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.
☆ திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.
☆ அரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.
☆ கணினி அறிவு பெற்றிருத்தல்.
☆ ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்கும் உயர்மட்டத் தேர்ச்சி இருத்தல்.

சி.ரங்கராசா,
பிரதம செயலாளர்,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
உள்துறைமுக வீதி,
திருகோணமலை.

(சி-192)

# மட்டு – கண்காணிப்பு பிரதிநிதியாக யோகேந்திரா நியமனம்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினராக இராசையா யோகேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை புலிகள் தரப்பு உறுப்பினராகக் கடமையாற்றிய கிருஷ்ண பிள்ளையின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புலிகள் தரப்பு உறுப்பினர்களின் கூட்டத்தில் இவரும் கலந்துகொண்டிருந்தார்.

இதேவேளை மட்டு.மாவட்ட அரசுத் தரப்புப் பிரதிநிதியான அப்துல் ர.்.மான் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளபோதும் இவரது இடத்துக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

# துயிலும் இல்லங்களுக்கு செல்லும் பெற்றோருக்கு வாகன வசதி

## வடமராட்சி அரசியற்துறை ஏற்பாடு

தமிழீழ மாவீரர் நாளான நவம்பர் 27ஆம் திகதி வன்னிப் பெருநிலப் பரப்பில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் அஞ்சலி செலுத்தச் செல்லும் பெற்றோர்களுக்கு - வாகன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

மாவீரர் நாளன்று காலை 9 மணிக்கு வடமராட்சி அரசியற்துறை அலுவலகம், வல்வெட்டித்துறை அலுவலகம் ஆகியவற்றில் ஒன்று கூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (23)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்.



பெயர் :யோ.ஆர்த்திகன்
முகவரி: இரத்தினம் பண்ணை,
உருத்திரபுரம்.

இரண்டாவது அகவையில்.



பெயர் : யோ.கிஸ்ஷானி
முகவரி: சுன்னாகம் மேற்கு
சுன்னாகம். (லண்டன்)

ஆறாவது அகவையில்.



பெயர் :ஜெ.பொறீஷியா
முகவரி: மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

ஒன்பதாவது அகவையில்.



பெயர் :பா.சுகீர்த்தனா
முகவரி: மாலிசந்தி,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

குறிப்பு: இம்மாத முடிவு வரை மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்

# வரவு செலவுத் திட்டம் - 2003

## ஓர் ஆய்வு

பகுதி 2



சொக்ஸி

### வாழ்க்கைச் செலவு

அரசாங்கமானது உயர்ந்த வாழ்க்கைச் செலவினைக் குறைக்கும் வகையில் தனியார் துறையினரின் செயற்பாடுகளில் காணப்படும் பல வரி வகைகளை அகற்றியுள்ளது. சுங்கத்தீர்வை மேலதிகக் கட்டணத்தினை (Customs duty sur charge) 40% இல் இருந்து 20% ஆகக் குறைந்துள்ளது. வர்த்தகம் தொடர்பான பத்திரங்களின் (Commercial Document) முத்திரை வரியானது நீக்கப்பட்டுள்ளது. வட்டி வீதங்களின் வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வருமான வரிக்கான மேலதிக வரி 20% உம் நீக்கப்பட்டுள்ளது. 5 மில்லியன் ரூபாவிற்குக் குறைவான வரிக்கு முன்னைய இலாபம் உழைக்கும் கம்பனிகளின் மீதான வருமான வரியானது 20% ஆக ஆக்கப்பட்டுள்ளது. G.S.T., N.S.L. போன்ற வரிகள் முற்றாக அகற்றப்பட்டு VAT முறைமையானது கொண்டு வரப்பட்டுள்ளது. அத்தியாவசியமான உணவு வகைகள், மருந்துப் பொருட்கள் மீது வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எரிபொருட்களின் மீதான இழப்பீட்டு வரியானது நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பல்வேறு வகையான வரிகள் நீக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றின் பெறுபேறுகள் நுகர்வோரைச் சென்றடைகின்றதா என்பதனை மிக நுட்பமாக ஆராய வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் பொருட்கள் சேவைகளின் விலை மட்டங்கள் உயர்வடைந்துள்ளமையால் பணவீக்கம் கடந்த வருட காலப்பகுதியில் 14.2% ஆகக் காணப்பட்டுள்ள நிலையில் இதன் நோக்கில் வீழ்ச்சியை ஏற்படுத்தவென அரசாங்கம் பல வரி விடுதலைகளை அளித்துள்ள போதிலும் இப்பணவீக்க வீழ்ச்சியானது ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. எனவே நுகர்வோர் பாதுகாக்கப்படக் கூடிய வகையில் (Consumer Protection Law) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் உடனடியாக அமுல்படுத்தப்பட்டு விலை மட்டங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அத்துடன் பொதுப்படு கடனுக்கான வட்டிக்கொடுப்பனவின் அளவினைக் குறைக்கும் பொருட்டு, நீண்டகாலக் கடன் முறிகள் Long term bonds உருவாக்கப்பட்டு குறைந்த வட்டி வதத்தில் அவை வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அத்துடன் பொதுப்படுகடனை முகாமை செய்யவெனத் தன்னிச்சையான பொதுப்படுகடன் அலுவலகம் ஒன்று உருவாக்கப்பட்டு, அவ் அலுவலகமானது நேரடியாக நிதியமைச்சிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் வகையில் அதன் அதிகார எல்லைகள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக 2003 இற்கு முன்னர் Public debt Management Law ஒன்று உருவாக்கப்படவுள்ளது. அத்துடன் அரச நிறுவனங்களில் உள்ள சிகப்பு நாடா Red Tapism முறையை இல்லாதொழித்து, அரச நிறுவனங்களை வினைத்திறன் ஆக்குவதோடு இல்லாமல், அரச துறைகளில் உள்ள தேவை அற்ற வேலைவாய்ப்புக்களை இல்லாதொழித்து - அதன் மூலம் 1.5 பில்லியன் ரூபா செலவினைக் குறைக்க முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அரச நிறுவனங்களின் தேவையற்ற செலவினங்கள் இனங்காணப்பட்டு அதன் மூலம் 2.8 பில்லியன் ரூபா செலவினத்தினை சேமிக்க முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய செயற்பாடுகள் மூலம் அரச செலவினங்கள் குறைக்கப்பட்டு அரச செயற்பாடுகள் வினைத்திறன் ஆக்கப்பட்டுள்ளது. இதனால் அரச செலவீனங்களின் ஓர் வினைத்திறன் மிக்க செயற்பாட்டை எதிர்காலத்தில் மக்கள் பெறவுள்ளதுடன் மக்களின் வரிப்பணமானது வினைத் திறனாக முகாமை செய்யப்படவுள்ளதாக எண்ண முடியும்.

### கம்பனிகள் மீதான வரி

2003 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து கம்பனிகள் மீதான வரியாக 30% ஆக அறவிடப்படவுள்ளது. அதாவது, வருடாந்தம் 5 மில்லியனிற்கு மேற்பட்ட வருமானம் உழைக்கும் கம்பனிகளுக்கு இவ்வரி வீதமானது பொருந்தும். இவ்வாறான வரிக் குறைப்பின் மூலம் அரசாங்கமானது 2 பில்லியனை இழக்க வேண்டி வரும். எனினும் இவ்வரிக் குறைப்பின் மூலம் சேமிக்கப்படும் பணத்தின் 50% ஆனது மனிதவள நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்படும் நிதியானது 2003இல் ஏறக்குறைய 1 பில்லியன் ஆகக் காணப்படும். இந்நிதியானது அரச, தனியார் கூட்டிணைவு மூலம் முகாமை செய்யப்படவுள்ளது. இந்நிதியானது இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை அளிக்கக் கூடிய வகையில் பல பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட உள்ளது. அத்துடன் தகவல் தொழில்நுட்பத்தில் இலங்கையை E Lanka என்ற கருப்பொருளில் இலங்கைவாழ் மக்களது தகவல் தொழில்நுட்ப அறிவினை விருத்தி செய்யவும் இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

### அலகு பொறுப்பாட்சி நிறுவனங்கள் மீதான வரி (Unit Trust)

ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருக்கும் அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களுக்கு 20% வரியானது அறவீடு செய்யப்படும். 2003 ஏப்ரல் முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் உருவாக்கப்படும் இத்தகைய கம்பனிகளுக்கு 5 வருட வரி விடுதலையும், நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கான முதலீடுகளின் வருமானங்கள் மீது (வட்டி, பங்குஇலாபம்) 10% பிடிப்பு வரியும் (With Holding Tax) உம் அறவிடப்படும். 2003 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து 20% பிடிப்பு வரியானது, குறிப்பிட்ட முதலீடுகளில் முதலிடாது - ஏனைய முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள, வருமானங்களின் மீதான வரியாக விதிக்கப்படும். 80% முதலீடுகளின் விசேட தன்மையானது அமைச்சரினால் தீர்மானிக்கப்படும். மிகுதி 20% உம் உள்ளூர்க் கம்பனிகளின், சர்வதேச நடவடிக்கைகளில் முதலிடப்பட்டதாக அமையலாம். அவை வெளிநாட்டு கம்பனிகளின் உப கம்பனிகளாகவோ அல்லது கிளைகளாகவோ காணப்படலாம்.

### வதிவற்ற கம்பனிகள் மீதான வரி

2003 ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து வதிவற்ற கம்பனிகள் மீதான பணத்தினைத் தனது சொந்த நாட்டிற்கு அனுப்புதல் தொடர்பில், 10% ஆன (Remittance Tax) பிரிக்கப்படும்.

### வட்டி வருமானங்களின் மீதி.

2003 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து ஒரு லட்சத்து 8 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட நிலையான வைப்புக்களின் மீதான வட்டி வருமானத்துக்கு வரிவிலக்கு அளிக்கப்படும். அதாவது ரூபா 72 ஆயிரத்திற்குக் குறைந்த வட்டி வருமானத்தின் மீது வரி அறவிடப்படமாட்டாது. ஏனையவற்றுக்கு பிடிபு வரியாக அறவிடப்படும்.

### பற்று வரி (Debits Tax)

இவ்வரியானது எதிர்காலத்தில் வங்கிகளில் வைத்திருக்கும் எல்லாக் கணக்குக்கும் அறவிடப்படவுள்ளது. 0.1% ஆக காணப்படவுள்ள இப்பற்று வரியானது 20,000 இற்கு உட்பட்ட பற்றுக்கு விதிக்கப்படமாட்டாது. இவ்வரிமுறையானது 2003 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றது.

### பெறுமதி கூட்டிய வரி (VAT)

2003 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் 10% பெறுமதி கூட்டிய வரிக்கு உட்படுத்தப்படவுள்ளன. வங்கிகளும் ஏனைய நிதிநிறுவனங்களும் 10 பில்லியன் ரூபாவை NSL மற்றும் Turnover Tax ஆகச் செலுத்தி வந்தன. இந்நிறுவனம் தற்போது உள்ள வரி முறைகளின் பிரகாரம், VAT இல் இருந்து விலக்களிக்கப்பட்டிருந்தன. இதனால் முன்னைய காலப்பகுதியில் இந்நிறுவனங்களில் இருந்து வரியாகக் கிடைத்த வருமானத்தை இழக்க நேரிட்டது. 2003 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இந்நிறுவனங்களின் மொத்தத் தேறிய லாபமும் ஊழியர் மீதான சம்பளங்களும் அவர்களுக்கான சலுகைகளும் உள்ளடங்கலாக 10% VAT அறவிடப்படவுள்ளது. ஆனால் இவ்வரிகள் உள்ளீட்டு வரிகளின் கணிப்பீட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் 2003 ஜூலை முதலாம் திகதியிலிருந்து VAT வரி அறவிடப்படவுள்ளது.




### துறைமுகம், விமான நிலையம் மீதான அபிவிருத்தி வரி (Port & Airport development Levy)

சர்வதேசரீதியான ஏற்றுமதிச் சந்தையானது தற்போது மிகுந்த போட்டிச் சந்தையாக மாறியுள்ளது. எனவே மறு ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படவுள்ள பொருட்களின் மீதான Port & Airport development Levy 0.75% இல் இருந்து 0.5% ஆகக் குறைக்கப்படவுள்ளது. 2003 ஜனவரியிலிருந்து இது அமுல்படுத்தப்படவுள்ளது. தொலைத் தொடர்புகள் மீதான VAT ஆனது 20% ஆக அறவிடப்படவுள்ளது.

### தற்போதைய வரவு செலவுத்திட்டத்திலுள்ள வரி மாற்றங்கள்

எல்லா அரச திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும், உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவும் VAT வரியை உள்ளடக்கிய விலைப் பட்டியலைப் பெற உரித்துடையவர்கள். அதாவது மேற்காட்டப்பட்ட நிறுவனங்கள் தமது நிறுவனங்களின் தேவைக்காகப் பொருட்களைக கொள்வனவு செய்யும்போது VAT வரியை உள்ளடக்கிய விலைப்பட்டியலைப் பெற வேண்டிய ஓர் நிலை தற்போது எழுந்துள்ளது. இந்நிலைமையானது எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள மோசடியைத் தவிர்ப்பதாகவே அமையும்.

### கணினி மென்பொருட்கள் இறக்குமதி மீதான வரி (Import of Computer Software)

1. வாடிக்கையாளரது பிரத்தியேகத் தேவைக்காகவோ அல்லது பொதுவான ஓர் தேவைப்பாட்டுக்காகவோ உருவாக்கப்பட்ட கணினி மென்பொருட்கள்.

2. உள்ளக நிறுவனத் தேவைக்காகவோ அல்லது கணக்கியல் அறிக்கையிடலுக்காகவோ உருவாக்கப்பட்ட கணினி மென்பொருட்கள்.

3. ஏற்கனவே உள்ள கணினி மென்பொருட்களை விரிவாக்கம் செய்தல்.

போன்ற நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற கணினி மென்பொருட்கள் மீதான VAT ஆனது பொருட்களுக்கான VAT வரியாகக் கணிப்பிடப்படாது, சேவைக்கான VAT ஆகக் கணிப்பிடப்படவுள்ளது.

### பிரயாணம் செய்யும் வாகனங்களுக்கான உள்ளூட்டுப் பெறுமதி கூட்டிய வரி

உள்ளீட்டு வரி 50% அறவிடப்படும். அவ்வாகனங்கள் வரி தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டால் புதிய பெறுமதி கூட்டிய வரி அறவீட்டில் மாற்றங்கள் (VATRatechanges) செய்யப்படவுள்ளது.

★ தொழில்சார் தகைமை வாய்ந்த நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு 10% மான VAT அறவிடப்படும்.

★ கைத்தறிப் புடைவைகள் தொடர்பான இறகுமதி அல்லது விநியோகத்திற்கு 10% VAT வரி அறவிடப்படும்.

★ ஆபரணங்கள் தொடர்பான இறக்குமதி அல்லது விநியோகத்திற்கு - 10%மான VAT விதிக்கப்படும்.

★ சோளம் இறக்குமதி அல்லது விநியோகத்திற்கு - 10%மான VAT அறவிடப்படும்.

★ மருந்துக் கருவிகள், பல் மருத்துவக் கருவிகள் மற்றும் சத்திரசிகிச்சைக் கருவிகள் என்பனவற்றின் இறக்குமதி, தொடர்பில் 10%மான VAT அறவிடப்படவுள்ளது.

செ.வசந்தகுமார்

### வீதி நிதி (Road fund)

இதற்கான அறவீடுகள் 2003 முதுலாம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

மோட்டார் சைக்கிள் - ஒட்டோ என்பனவற்றுக்கு ரூபா 250 உம்.

கார், அன்புலன்ஸ், ஜீப் என்பனவற்றுக்கு 1,500cc இற்கு உட்பட்டவை எனின், ரூபா 1,000 உம், 1500cc இற்கு மேற்பட்டவை எனின் ரூபா 2,000 உம் அறவிடப்படும். லொறி ஒன்றுக்கு 15,000Kg இற்கு உட்பட்டவைக்கு ரூபா 1,000 உம், 15,000 Kg இற்கு மேற்பட்டவைக்கு ரூபா 2,000 உம் அறவிடப்படவுள்ளது.

இருவர் மட்டும் பயணம் செய்யும் வாகனங்கள், 2000 Kg இற்கு உட்பட்டவைக்கு ரூபா 1000 உம், 2000 Kgஇற்கு மேற்பட்டவைக்கு ரூபா 2,000 உம் அறவிடப்படவுள்ளது. உழவு இயந்திரங்களுக்கு - 100 ரூபாவும் 30cc இற்கு உட்பட்ட பொதுமக்கள் பயணஞ்செய்யும் வாகனங்களுக்கு ரூபா 1,000 உம் 30cc இற்கு மேற்பட்டவற்றுக்கு 1,500 ரூபாவும் அறவிடப்படும்.

(தொடரும்)

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | சுன்னாகம் | சங்கானை | பருத்தித்துறை | ஊர்காவற்றுறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| வெங்காயம் | 50/- | 55/- | 50/- | 50/- | 60/- | 60/- | 50/- |
| பச்சை மிளகாய் | 60/- | 50/- | 75/- | 50/- | 45/- | 60/- | 50/- |
| கத்தரிக்காய் | 80/- | 80/- | 70/- | 80/- | 70/- | 90/- | 60/- |
| பாகற்காய் | ✹ | 80/- | 75/- | 80/- | 70/- | 60/- | 80/- |
| பயிற்றங்காய் | 50/- | 50/- | 40/- | 50/- | 40/- | 50/- | 40/- |
| வெண்டிக்காய் | ✹ | ✹ | 25/- | 20/- | 15/- | 30/- | 20/- |
| உருளைக்கிழங்கு | 75/- | 70/- | 80/- | 80/- | 80/- | 80/- | 70/- |
| பீற்றூட் | 20/- | 20/- | 20/- | 20/- | 20/- | 30/- | 20/- |
| கரட் | 60/- | 60/- | 35/- | 50/- | 30/- | 60/- | 40/- |

# யாழ். குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கைகள்

## அன்றும் இன்றும்

பகுதி I

தமிழின்பன்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கடற்தொழில் பிரதான பங்கினை வகித்து வருகின்றது. ஏனெனில் குடாநாட்டைச் சூழக் கடல்வளம் காணப்படுவதே ஆகும். வடபகுதிக் கடற்பரப்பு 3360 சதுரமைல் ஆகும். (Contineutal Shelt area)

1980களில் இலங்கையின் மற்றைய பகுதிகளைவிட உயர்ந்த ஓர் இடத்தை கடற்தொழில் நடவடிக்கைகளில் யாழ். குடாநாடு அனுபவித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக, 1983 காலப்பகுதியில் இலங்கையின் மொத்த மீனுற்பத்தியில் குடாநாட்டில் 26% உடனடி மீனும் (48,776 mt), 57% கருவாடு (5,484 mt) உற்பத்தி செய்யப்பட்டது. இதேகாலப்பகுதியில் 24, 839 பேர் நேரடி வேலைவாய்ப்பையும், 5,000 பேர் கடற்தொழிலுடன் சம்பந்தப்பட்ட தொழில் வாய்ப்புக்களையும் பெற்றனர். குறிப்பாக, 1983ஆம் ஆண்டளவிலேயே குடாநாட்டில் மீன் உற்பத்தி உயர்ந்தளவில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 22,500 மீனவக் குடும்பங்கள் அக்காலப்பகுதியில் வாழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மீன் பிடிக்கும் துறைமுகங்களாக - மயிலிட்டி, நாகர்கோயில், பருத்தித்துறை என்பனவும் மீன்பிடி இறங்குதுறையாக குருநகர், பாசையூர் என்பனவும் காணப்பட்டன. மொத்தமாக 11 பனிக்கட்டி ஆலைகள் காணப்பட்டன. இதன்மூலம் பிடிக்கப்படும் மீன்கள் பதனிடப்பட்டு உடனுக்குடன் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வந்தது.

யாழ். குடாநாட்டின் கடலுற்பத்தியில் குறிப்பாக - சங்கு, கடலட்டை, சிங்கி இறால், கறுப்பு இறால், நண்டு போன்றன முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவை பெருமளவு வெளிநாட்டு வருவாயைத் தேடித் தரும் செல்வங்களாகும்.

குடாநாட்டின் கடற்தொழில் நடவடிக்கைகளை கடற்தொழில் சமுத்திரவள அமைச்சின்கீழ் உள்ள கடற்தொழில் நீரியல்வளத் துறை திணைக்களம் வழிநடத்தி வருகின்றது. யாழப்பாணக் கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களமானது, யாழ். குடாநாட்டை 15 கடற்தொழில் பரிசோதகர் பிரிவுகளாகப் பிரித்துள்ளது

அவையாவன:-

யாழ்ப்பாணம் மேற்கு, யாழ்ப்பாணம் கிழக்கு, பருத்தித்துறை மேற்கு, பருத்தித்துறை கிழக்கு, தாளையடி, காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை கிழக்கு, சண்டிலிப்பாய், சுழிபுரம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை, சாவகச்சேரி, ஆழியவளை, பளை என்பனவாகும்.

1983 காலப்பகுதியில் சீநோர் நிறுவனம் சிறந்த முறையில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். குருநகர் சீநோர் தொழிற்சாலை, வலைகளை உற்பத்தி செய்து மீனவர்களுக்கு வழங்கியது மட்டுமல்லாது, பல பேருக்குத் தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அத்துடன், காரைநகரில் கன்நார் இழைக் கண்ணாடிப்படகுகளையும் நிர்மாணித்து மீனவர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அத்துடன் மண்டைதீவில் கடலுணவுகளைப் பயன்படுத்திக் கோழித்தீன் தயாரிக்கும் தொழிற்சாலை இருந்தமையையும் இங்கு குறிப்பிடலாம்.

கடற்தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக பல கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களை உருவாக்கியுள்ளனர். இச்சங்கங்கள் கூட்டுறவுத் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக 113 சங்கங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்குகின்றன. அத்துடன் - வடமராட்சியிலும், யாழ்ப்பாணத்திலுமாக இரண்டு சமாசங்கள் இயங்குகின்றன. இச்சமாசங்களில் கடற்தொழில் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன.

1983 காலப்பகுதியில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் இங்கு இயங்கியது. இது மீனவர்களிடம் இருந்து நல்ல விலைக்கு மீனைக் கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ். குடாநாட்டில் - கட்டுமரம், வள்ளம், கண்ணாடி இழைப்படகு, இழுவைப் படகு, 31/2 தொன் வள்ளம், பலநாட்கலம், ஒரு நாட்கலம், 28′ -32′ படகு போன்றன பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால், தற்போது கட்டுமரம், வள்ளம் போன்ற பாரம்பரியக் கலங்களே பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனையவை கடல்வலயத்தடைச் சட்டம், யுத்தம் போன்ற காரணத்தினால் அழிவடைந்து விட்டன. இதனால் தற்போது மிகவும் குறைந்தளவிலேயே இவை பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

பொதுவாக - யாழ்.குடாநாட்டில் கரைவலை, களங்கண்டி, இறால்கூடு, வீச்சுவலை, படுப்பு வலை, தூண்டில்வலை போன்றன முக்கிய தொழில்களாக விளங்குகின்றன. இவை பற்றி மேலதிகமான விளக்கங்கள் தொடரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

1983 காலப்பகுதியில் தும்புக்கண்ணாடி படகு கட்டும் இடங்கள் கீழ்வரும் பகுதிகளில் காணப்பட்டன.

***28′ - 32′ கொண்ட கலங்கள் கட்டுமிடங்கள்***

1.K.R Boat Yard
2.V.K.S Boat Yard
3.A.R.B Boat Yard
4.K.N.R Boat Yard
5.CE-NOR Boat Yard

***17 1/2′- 24′ கொண்ட கலங்கள் கட்டுமிடங்கள்***

1.CEY - NOR
2.Fibdrite Marine Industries

யாழ்.குடாநாட்டில் மீனவர்கள் தொழில் புரியும் இறங்குதுறைகள் 96 காணப்படுகின்றன. இவை பற்றிய விபரங்களையும் தொடரும் அத்தியாயங்களில் பார்க்கலாம்.

தற்போது மக்கள் மீளக் குடியமராத பிரதேசங்களாக உள்ள காங்கேசன்துறை, ஊரணி, வலித்தூண்டல், வளலாய், சேந்தாங்குளம், சீந்திப் பந்தல், காரைநகர், நீலங்காடு, திருவடிநிலை, சம்பில்துறை, கீரியாடுதுறை, நாகர்கோவில், கிளாலி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கோயிறகுடியிருப்பு போன்ற இடங்களில் பெருமளவிலான கடற்தொழில் வளம் காணப்பட்டது. *(தொடரும்)*

# தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகளை கவரும் பனம் பொருள் உற்பத்திகள்!







யாழ்ப்பாணத்தில் கடந்தகாலத்தில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக பல்லாயிரக்கணக்கான பனைமரங்கள் அழிக்கப்பட்டும் தறிக்கப்பட்டும் இருக்கின்றபோதும், தற்போது பனைவளம் சம்பந்தமான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதன் விளைவாகவே இன்று பனைமரங்களை புதிதாக நடப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணம் வரும் தென்னிலங்கை மக்களும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகளும் யாழ்ப்பாணத்தில் விரும்பி நுகரும் பொருட்களில் பனை உற்பத்திப் பொருட்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. யாழ்ப்பாணத்தின் தேசிய உற்பத்திப் பொருளாக இன்று பனை உற்பத்திப் பொருட்கள் இருப்பது அவதானிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது.

இப்பின்னணிகளில் யாழ்ப்பாணத்தில் பனம்பொருள் கைப்பணி உற்பத்தித் தொழில் நுட்பம் புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன் யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது.

இப்பயிற்சி நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரான்சிஸ் றெஜிஸ் நியூட்டனிடம் பனம்பொருள் கைப்பணி உற் பத்தி தொழில்நுட்பம் தொடர்பாக உரையாடியபோது இத்தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்தது.

இப்பயிற்சிநெறிகள் 2001ஆம் ஆண்டில் புனர்வாழ்வு அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள வேலையற்ற நூறு இளைஞர், யுவதிகள் தெரிந்தெடுக்கப்பட்டு இவர்களை ஐந்து குழுக்களாக பிரித்து ஒரு குழுவிற்கு இப் பனம்பொருள் கைப்பணி உற்பத்தி தொழில்நுட்பம் பயிற்றுவிக்கப்படுகிறது.

இப்பயிற்சிநெறிகள் யாழ்ப்பாணத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சிநெறி எட்டு மாதங்களைக் கொண்டதாகும். பின் இவர்களுக்கு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. ஆயினும் இப் பரீட்சை நடைபெற்று - ஒரு வருடமாகின்ற போதிலும் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் இவ் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இப்பயிற்சிநெறியில் பயின்ற மாணவர்கள் அனைவருக்கும் மாதாந்தம் மூவாயிரம் ரூபா ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது.

பின்னர் இரண்டாம் கட்டப் பயிற்சிநெறி இவ்வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டு, இதில் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு, இவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, இதில் ஒரு குழுவிற்கு பனம் பொருள் உற்பத்தி கைப்பணி தொழில்நுட்பம் பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. இவர்களுக்கான பயிற்சி முடிவில் அந்தந்த பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பரீட்சைகள் நடைபெற்றன். இவர்களுக்கான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இவ்வருடம் ஓகஸ்ட் மாதத்திலிருந்து ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் மேற்படி கற்கைநெறிகளில் பொருத்தமான ஏதாவது ஒரு கற்கைநெறியை தெரிவுசெய்து, இந்தப் பயிற்சிநெறியைப் பயின்ற மாணவர்களில் பத்துப் பேர் தெரிவுசெய்யப் பட்டு "உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்" என்ற ஓர் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஐந்நூறு ரூபா மாதாந்த ஊக்குவிப்புப்பணம் வழங்கப்பட்டதுடன் இத்திட்டத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு அப்பணத்தில் ஒரு பகுதி இம்மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவில் பத்து மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு இவர்களில் ஐந்து மாணவர்கள் பனம்பொருள் உற்பத்தி கைப்பணித் தொழில் நுட்பத்தையும் ஐந்து மாணவர்கள் மரவேலைத் தொழில் நுட்பத்தையும் பயின்று வருகின்றனர்.

புனர்வாழ்வு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட இப்பயிற்சிநெறிகளில், இதுவரை இருநூறு மாணவர்கள் இணைந்து தமது பயிற்சியை நிறைவுசெய்துள்ளதுடன், இவர்களில் ஐம்பது வீதமானோருக்குமேல் தாம் கற்ற இப்பயிற்சிநெறிகளின் மூலம் இன்று உழைத்து வருகின்றனர். இவற்றைப் பாரிய அளவில் தொடரவும் திட்டமிட்டுள்ளனர்.

இப்பயிற்சிநெறிகளைப் பயில்வதற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கென ஐம்பதாயிரம் ரூபா அரசாங்க அதி பர் செயலகத்தினால் வழங்கப்பட்டது. இப்பணம் பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் சேகரிக்கப்படும் பணத்திலிருந்து சிறிது சிறிதாக மீளளிக்கப்பட்டு வருகிறது.

இப்பனம்பொருள் கைப்பணித் தொழில் நுட்பத்தின் மூலம் எமது பனை வளத்தின் பயன்பாடுகள் சிதைவடையாமல் பேணப்படுகிறது. பனை யோலைகளால் பல பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றில் ஒலைத் தொப்பி, கைப்பை, தோல்பை, மலர்ச் செண்டு, பலகாரங்களின் உபசரிப் புத்தட்டு என்பன முக்கியமான பொருட்களாகும். அத்துடன் பனை மரக்குத்தியைக் கடைந்து புகைப்படத்தாங்கி, மலர்ச் சாடி, அலுவலக மேசைகளில் வைக்கப்படும் எழுதுகருவித் தாங்கி என்பனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தென்பகுதி சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நல்ல செல்வாக்கினைப் பெற்றுள்ளன.

இப்பனம்பொருள் கைப்பணித் தொழில் நுட்பத்தை கற்பதற்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இப் பயிற்சிநெறிக்கென புனர்வாழ்வு அமைச்சினால் பல தளபாடங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. எனவே, தொடர்ந்தும் இத்திட்டத்தின் மூலம் பல மாணவர்களுக்கு பனம் பொருள் உற்பத்தி கைப்பணி தொழில் நுட்பத்தை பயிற்றுவிப்பதன் மூலம் எமது பிர தேசத்தில் பனை மரங்களை எமது தேசியச் சொத்தாக தரமுயத்துவதுடன் பனையின் பயனை எல்லோரும் அடைவதற்கு ஆவண செய்யப்பட வேண்டும். இப் பயிற்சிநெறியைப் பயின்ற மாணவர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதும் அனைவரினதும் கடமை.

***நேர்காணல்:***
**தேவராஜா லிவிங்ஸ்டன்**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல
நாட வளந்தரும் நாடு.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## வன்னியை வளமாக்குவோம்!

வன்னியில் உயர்கல்வி நிலையங்களை, குறிப்பாக சர்வதேச தரம் வாய்ந்த தொழில் நுட்பக் கல்லூரியொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான ஒரு முயற்சி - வன்னிப்பகுதியின் நீண்டகால அபிவிருத்தித் திட்டமிடலுக்கான ஒரு பயனுள்ள நகர்வு என்பதோடு -

அப்பகுதியிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கான பற்றாக்குறையை நீக்கும் முதற்கட்ட நடவடிக்கையாகவும் அமையப்பெறவுள்ளது.

வளமுள்ள வன்னிப் பகுதியில் - வனவளமும், கடற்தொழில், விவசாய வளங்களும் கொட்டிக் கிடக்கின்றபோதும் - கல்வி சார்ந்த நிலையில், பெரும் வெற்றிடமொன்றே அங்கு நிலவிவருகின்றது.

கற்றலுக்கான அடிப்படை வசதிகள் முதலாக உயர்கல்வி வரையில் - அவசியமான தேவைகள் ஏராளமாயுள்ள நிலையில், வன்னியின் அபிவிருத்திக்கு, கல்விசார் விருத்தி நடவடிக்கைகளில் முழுமையான கவனம் செலுத்தப்படவேண்டிய கட்டாயம் இன்று எழுந்துள்ளது.

முன்னைய காலங்களில் - வன்னியின் வள விரிவாக்கம், கவனத்தில் கொள்ளப்படாதிருந்த போதும் - விடுதலைப்போராட்டம் முனைப்புப் பெற்றதன் பின்னர், குறிப்பாக யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னர் வன்னிப் பகுதியின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகியது.

இராணுவத் தாக்குதல்களால் பெருமளவு குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றதோடு, விடுதலைப் புலிகளின் பிரதான மையமாகவும் வன்னி மாறியமையானது - வன்னிக்கான விருத்திப் பணிகள் பற்றிய புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்தியிருந்தது என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

இந்த வகையில் - விடுதலைப்புலிகளின் பிரதான மையமாக வன்னிப்பகுதி தோற்றம் பெற்றது - வன்னியை வளமாக்குவதற்கான நீண்டகாலத் தொலைநோக்குத் திட்டங்களுக்கு உந்து விசையாக அமைந்தது என்றும் கூறலாம்.

இதன்படி- கிடைத்துள்ள அரிய வாய்ப்பினைத் கொண்டு, தமிழர் தாயகத்தின் பெருநிலப்பரப்பொன்றை - சகல வழிகளிலும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளை முன்னெடுக்க இன்றைய காலம் வாய்ப்பானதாகும்.

வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்யவும், புனரமைக்கவும் தீட்டப்படும் திட்டங்களில், வன்னிப் பகுதிக்கு குறிப்பிடத்தக்க இடத்தை அளிப்பதன் மூலம் - நீண்ட, நிரந்தரமான அபிவிருத்திப் பணிகளுக்குப் புதியதொரு பரிமாணத்தை ஏற்படுத்தமுடியும்.

பெரும் புவியியற் பரப்புடன் பரந்து, விரிந்து கிடக்கின்ற வன்னி - எதிர்காலத்தை நோக்கிய, முழுமையான வளர்ச்சிக்கு, தகுந்த களமாக அமையுமென்ற - யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராசாவின் கணிப்பீடுகள் துணைநிற்க, புதிய தொலைநோக்குத் திட்டங்களின் ஆரம்பம் இனி வேகங்கொள்ள வழி பிறக்கும் என்ற நம்பிக்கை வன்னி மக்கள் மனதில் உதயமாகியுள்ளது.

இந்த நீண்டகால ஆதங்கத்தை தீர்க்கும், முதற்படியாக தொழில்நுட்பக் கல்லூரிக்கான முயற்சி அமையவேண்டும்.

இதன்வழியே - யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீடமும், விவசாயப் பீடமும் - வன்னிக்கு நகருமானால், அவையும் பேராசிரியர் துரைராசாவின் கனவுகளை நனவாக்கும். அவை, வன்னிப்பகுதி மக்களின் வாழ்வில் - புதிய வளர்ச்சிப் பாதைகளையும் திறக்கும்.

# பேச்சுக்கு எதிராக ஜே.வி.பி. லண்டனில் பிரசார இயக்கம்

(கொழும்பு)

பிரிட்டனிலுள்ள சிங்கள மக்கள் மத்தியில்-தற்போதைய சமாதானப் பேச்சுக்களுக்கு எதிரான பிரசார இயக்கமொன்றை ஜே.வி.பி. ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பிரச்சார இயக்கம் இன்று ஆரம்பமாகின்றது. பேச்சு வார்த்தை தொடர்பாகவும், புலிகள் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கத்துக்கு, எதிரான கருத்துக்களை முன்வைத்து இந்தப் பிரசார இயக்கம் நடத்தப்படும்.

இப்பிரசார இயக்கத்தில் கலந்துகொள்வதற்காக ஜே.வி.பி.யின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரில்வின் சில்வா லண்டனுக்குப் பயணமாகியுள்ளார். இவர் ஜே.வி.பி.யின் தலைவரும், தற்போது லண்டனில் தங்கியுள்ள வருமான சோமவன்ச அமரசிங்கவுடன் இணைந்து இந்தப் பிரசார இயக்கத்தை முன்னெடுக்கவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

**- கல்வி அமைச்சினால் -**

## தொழில்நுட்பக் கல்லூரிக்கு வாகனம் அன்பளிப்பு!

(நமது நிருபர்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் பாவனைக்காக வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

பிராந்திய உப பணியகத்தின் பாவனைக்காக வழங்கப்பட்ட இவ்வாகனம் - யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியின் பாவனைக்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

மூன்றாம் நிலை பயிற்சி கல்வி அமைச்சர் கபீர் காசிமின் பணிப்புரைக்கு அமைய இவ்வாகனத்தை தொழில்நுட்ப கல்வி பயிற்சி திணைக்கள பணிப்பாளர் நாயகம் கே.ஈ.ஈ.விஜேரட்ணா, பிரதி பிராந்திய பணிப்பாளர் ந.யோகராஜனிடம் கையளித்துள்ளார்.

## பெண்களின் மந்தபோசணை இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பெண்களின் மந்தபோசணை வீதம் வருடந்தோறும் அதிகரித்து வருவதாக சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் துஷித மலலசேகர தெரிவித்துள்ளார்.

இந்த மந்தபோசணை நிலையானது சமூகத்தில் பாரிய தாக்கங்களை உருவாக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். பெண்களின் மந்தபோசணைக்கு வறுமை காரணமல்ல என்றும் தாய்மார்களின் கவனயீனமே காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆயுதக் கப்பல் காணாமற்போன சம்பவம் இராணுவ மேஜர்ஜெனரலுக்குத் தொடர்பு!

## சி.ஐ.டி விசாரணையில் தெரிவிப்பு

(கொழும்பு)

1997ஆம் ஆண்டு சிம்பாப்வேயில் இருந்து மோட்டார் குண்டுகளை ஏற்றிவந்த கப்பல் ஒன்று காணாமற்போன விவகாரத்துடன் இராணுவத்தில் முன்னர் பணியாற்றிய மேஜர் ஜெனரல் தர அதிகாரி ஒருவருக்கும் அவரது மகனுக்கும் தொடர்புகள் இருப்பதாக குற்றப் புலனாய்வு பொலிசாரின் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

ஆயுதக் கொள்வனவு மோசடிகள் குறித்த விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுப் பொலிசார் ஆரம்பித்த பின்னர், பல அதிர்ச்சியான தகவல்கள் வெளிவர ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

'ஸ்ரில்லிஸ் லிமுசுல்' என்ற கப்பலில்தான் மேற்குறிப்பிட்ட மோட்டார் குண்டுகள் ஏற்றி அனுப்பப்பட்டதாக கூறப்பட்டது.

ஆனால், விசாரணைகளில், இப்படியான பெயரில் கப்பலே இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்தே மேலும் பல இராணுவ அதிகாரிகளுக்கும் இந்த மோசடியுடன் சம்பந்தம் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதனையடுத்து பல கோணங்களில் விசாரணைகளைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் இணையம் அமைப்பு

(கொக்குவில் மேற்கு)

வடக்கு - கிழக்கு உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியங்களை இணைத்து செயற்படும் நோக்கில் இணையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இவ்இணையம் தொடர்பாக நேற்றுமுன்தினம் - யாழ்.உயர் தொழில்நுட்ப பணிப்பாளர் ரி.ராஜரட்ணம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு ஆகிய தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருந்து 33 மாணவ பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இவ் இணையச் செயற்பாடு, அனைத்து ஒன்றிய மாணவ பிரதிநிதிகளின் அனுசரணையுடன் நடைபெறவிருக்கின்றது. இவ் இணையம் தை மாதம், மட்டக்களப்பு உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் தனது முதற்செயற்பாட்டை ஆரம்பிக்கும் எனத் தெரியவருகின்றது. (108)

**- யாழ்.,தீவக வலய -**

## ஆங்கில ஆசிரியர்களுக்கான மூன்று நாள் செயலமர்வு !

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தீவகவலய ஆங்கில ஆசிரியர்களுக்கான மூன்று நாள் செயலமர்வுக் கருத்தரங்கு - இன்று தொடக்கம் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 வரை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் அழைப்புக் கடிதம் கிடைத்த அனைத்து ஆசிரியர்களையும் பங்குபற்றும்படி யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு - ஒக்ரோபர் 15ஆம் திகதி நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மட்டு - பளுகாமம்**

## புலிகளின் காவல் நிலையத்தில் 135 முறைப்பாடுகள் பதிவு!

(மட்டக்களப்பு)

மட்டு-பளுகாமத்தில் புலிகளின் காவல் பணிமனை திறக்கப்பட்ட பின்னர் - இரு வார காலங்களில் மட்டும் 135 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இங்கு காவல் பணிமனை மீளத் திறக்கப்பட்ட பின்னர் காணி, கடன் மற்றும் 4 கொலைச் சம்பவங்கள் உட்பட 135 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த பலரும் இங்கு முறைப்பாடுகளைச் செய்துள்ளதாக தெரியவருகின்றது.

## ஒஸ்லோ உதவி வழங்கும் கூட்டத்துக்கு ஐரோப்பிய யூனியனும் செல்லும்!

**- சமாதான முயற்சிகளுக்கும் வரவேற்பு -**

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஐரோப்பிய யூனியன் கலந்துகொள்ள முடிவு செய்துள்ளது.

பிரசல்ஸ் நகரில் இடம்பெற்ற ஐரோப்பிய யூனியனின் அமைச்சரவைக் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்படவுள்ளது. அத்துடன் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஐரோப்பிய யூனியன் பூரணமான ஆதரவை வழங்குவது என்றும், இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதை வரவேற்றுள்ள ஐரோப்பிய யூனியனின் அமைச்சரவை, இந்தச் சமாதான முயற்சிகளில் முன்னின்று உழைப்பதற்காக நோர்வே அரசுக்கும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

# அரியாலை சனசமூக நிலையத்திலிருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேறினர்

## தளபாடங்கள், புத்தகங்களும் எடுத்துச்செல்லப்பட்டன

(அரியாலை)

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையக் கட்டடத்தில் நிலைகொண்டிருந்த இராணுவம் நேற்றுமுன்தினம் அங்கிருந்து முற்றாக வெளியேறியது.

இதனைத் தொடர்ந்து அதன் நிர்வாகிகள் குறிப்பிட்ட தினத்தில் பி.ப.6.00 மணியளவில் நிலையத்தைப் பொறுப்பேற்று மீளவும் இயங்கத் தொடங்கினர்.

மேற்படி இராணுவம் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் சனசமூக நிலையத்தின் செயற்பாடு ஸ்தம்பிதமடைந்திருந்ததால் கல்வி, கலை, விளையாட்டு போன்ற துறைகள் பாதிப்படைந்திருந்தன.

அதேவேளை, கட்டடத்திலிருந்த பெறுமதிவாய்ந்த தளபாடங்கள் மற்றும் புத்தகங்கள் வெளியேறிய இராணுவத்தினரால் எடுத்துச்செல்லப்பட்டுமுள்ளன.

(55)

# மக்கள் அரங்கம்

## மணிவிழாக் கண்ட செயலாளர் சொ.அமிர்தலிங்கம்



வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சொ.அமிர்தலிங்கம் கடந்த 14ஆந் திகதி அறுபது அகவையடைந்து மணிவிழாக் கண்டுள்ளார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புவியியல் சிறப்புப் பட்டதாரியாக அவர் வெளியேறினார். ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமிர்தலிங்கம், முதலில் அனுராதபுரம் விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர், 1971இல் இலங்கை நிர்வாக சேவையில் தெரிவு செய்யப்பட்டு வவுனியா மாவட்டத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட புதுக்குடியிருப்புப் பிரிவின் காரியாதிகாரியாக நியமனமானார். 1975இல் நெடுந்தீவின் உதவி அரசாங்க அதிபராகப் பதவியேற்று பல அபிவிருத்திப் பணிகளைப் புரிந்துள்ளார். நெடுந்தீவின் 'வெல்லை'க் கிராமத்தை உப உணவு உற்பத்தித் திட்டத்தின் மூலம் விருத்தியுறச் செய்தமையால், அக் கிராமம் இன்று "அமிர்தபுரம்" என வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. கச்சதீவின் புனித அந்தோனியார் திருவிழாவைத் தொடர்ந்து நான்கு வருடங்கள் நடாத்தியுள்ளார்; நல்ல முறையில் ஒழுங்குபடுத்திச் சிறப்பாக இவ் விழாவை நடாத்திய பெருமை அமிர்தலிங்கத்திற்குரியது. நானாட்டான் உதவி அரசாங்க அதிபராக விளங்கியபோது பெரியகுஞ்சுக்குளம், நறுவிலிக்குளம் ஆகிய இரு மாதிரிக் கிராமங்களைத் தோற்றுவித்தார்.

அமிர்தலிங்கத்தின் உச்ச பணிக்காலம் கிளிநொச்சி மாவட்டத்தில் நிகழ்ந்தது. 1984ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தை ஸ்தாபித்து புதிய மாவட்டச் செயலகத்தை உருவாக்கியவர்களில் அமிர்தலிங்கம் முக்கியமானவர். அரசாங்கஅதிபர் ஜெயநாதன், உதவி அரசாங் அதிபர் (அபிவிருத்தி) க.குணராசா ஆகியோருடன் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபராக விளங்கிய அமிர்தலிங்கம் புதிய மாவட்டத்தையும், நிர்வாகச் செயலகத்தையும் உருவாக்குவதில் முன்னின்றுள்ளார். பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக கட்மை புரிந்தார்.

1992இல் முதன் முதலாக வடக்கு - கிழ்க்கு மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்ட வவுனியா பிரதேசச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 1995இல் வடக்கு - கிழக்கு கல்வியமைச்சுக்கு மேலதிகச் செயலாளராக நியமனம் பெற்று பின்னர் பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளராகப் பணிபுரிந்து, இன்று மாகாண கௌரவ ஆளுநரின் செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

மணிவிழாக் காணும் சொ.அமிர்தலிங்ம் மூத்த நிர்வாக அதிகாரி. பயனுள்ள பணிகளைப் புரிந்தவர்.

## சமாதான நீதவானாக நியமனம்



தெல்லிப்பளை குரும்பசிட்டியை சேர்ந்தவரும் தற்பொழுது கொழும்பில் வசிப்பவரான திருமதி பவானி மகாதேவன் நீதியமைச்சரினால் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு அண்மையில் கல்கிசை மேலதிக மாவட்ட நீதவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த இவர் நுகேகொட தமிழ் மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபாராக பணிபுரிந்து வருகிறார். கொழும்பு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் உயர் ஆங்கில டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார். சர்வதேச கல்வி நிறுவனத்தினால் 1997 ஆம் ஆண்டு யூலை மாதம் மலேசியாவில் நடாத்தப்பட்ட ஆசியபசுபிக் பிராந்திய மகளிர் மாநாட்டில் இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்தின் இரு பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்துகொண்டார். மேற்படி நிறுவனம் இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்துடன் இணைந்து நடாத்திய தலைமைத்துவம், ஆசிரியர்களின் கடமைகள், பொறுப்புக்கள், உரிமைகள், சலுகைகள், பெண்களின் சமத்துவத்தில் ஆசிரியர்களின் பங்கு, வளவியலாளர் போன்ற பல பட்டறைகளிலும், செயலமர்வுகளிலும் கலந்துகொண்டு அவற்றிற்கான சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

கண்டி நல்லாயர் மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரா கிய இவர் சட்டத்தரணி க.வே. மகாதேவனின் மனைவி ஆவார்.

## கல்வியியல் கல்லூரி 2ஆம் வருட பரீட்சைகள்

(புன்னாலைக்கட்டுவன்)

தேசிய கல்வியற் கல்லூரி இரண்டாம் வருட ஆசிரியப் பயிலுநர்களுக்கான இறுதி எழுத்துப் பரீட்சை டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

இவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதுடன் இவர்களுக்கான நேரசூசி மற்றும் அனுமதி அட்டை என்பனவும் கிடைக்கப்பெற்றதாகவும், நேர அட்டவணையை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியப் பயிலுநர்கள் ஜனவரி மாதம் முதல் ஒருவருடகால உள்ளகப்பயிற்சியை மேற்கொள்வதற்காகப் பாடசாலைகளுக்குச் செல்லவுள்ளனர்.

இவர்களுக்கான இறுதிப்பரீட்சை நவம்பர் 25 ஆம் திகதி நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (83)

## பிரதேசசபை நிதி ஒதுக்கீட்டில் பாடசாலைக்கு வகுப்பறை

(ஊரெழு)

சுன்னாகம் பிரதேச சபையின் விசேட நிதி ஒதுக்கீட்டில் இருந்து - சுன்னாகம் ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலைக்கு வகுப்பறைக்கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கடந்த 100 வருடங்களுக்கு மேல் இப்பாடசாலையில் எவ்வித புதிய கட்டடமும் அமைக்கப்படவில்லை எனவும், தற்போது ஒதுக்குள்ள நிதியும் போதுமானதாக இல்லை எனவும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (96)

- ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் -

# நெடுந்தீவுக்கு ஆயுதங்களோடு சென்றது புலிகளுக்கு ஆபத்து விளைவிக்கவே!

- மாவை சேனாதிராசா எம்.பி. அறிக்கை -

அரசிடம் ஆயுதங்களை ஒப்படைததாகக் கூறிக்கொள்ளும் ஈ.பி.டி.பி யினர், ஆயுதங்களோடு நெடுந்தீவில் தரையிறங்கியிருப்பதாகக் கிடைக்கின்ற செய்திகள்- ஆயுதமின்றி அரசியற் பணியாற்றும் விடுதலைப்புலிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நோக்கமுடைய செயல் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நெடுந்தீவுப் பிரதேசத்தில் முகாம் அமைப்பது தொடர்பாக ஈ.பி.டி.பி. கட்சியினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்டுவரும் மோதலைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகள் சமாதானச் சூழலுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

கடந்த 18ஆம் திகதி காலை முதல் நெடுந்தீவுப் பிரதேசத்திலிருந்து பொதுமக்களின் பிரதிநிதிகள் தொடர்பு கொண்டு அங்கு ஏற்பட்டுள்ள பதற்றநிலை பற்றி எடுத்துக் கூறிவந்துள்ளனர். அங்கு வந்திருந்த பொலிஸ் உயர் அதிகாரிகளே தம்மை அச்சுறுத்தியதாக முறையிட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பியினர் ஆயுதங்களுடனும், இராணுவ உடையிலும் இருப்பதாகப் பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர். கடந்த காலத்தில் ஆயிரக்கணக்கான ஆயுதங்களைப் பெற்று இராணுவத்துடனும், கடற்படையுடனும் துணையாக வேலை செய்தவர்கள் 200 ஆயுதங்களை மட்டுமே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பின் அரசிடம் ஒப்படைத்ததாகச் செய்திகள் வந்தன. மிகுதி ஆயுதங்களுடன் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அரச படைகளுடன் இருக்கிறார்கள் என்ற பலமான சந்தேகம் நிலவுகிறது. தீவுப பகுதிகளில் அவர்கள் நடவடிக்கைகள் இதற்கு ஆதாரமாகின்றன.

போர் நிறுத்தத்திற்கானதும் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்குமான, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உண்மை நோக்கத்தை முறியடிக்கும் - பல நடவடிக்கைகள் நாட்டில் இடம்பெற்று வருவதை அவதானிக்கும்போது, இனப்பிரச்சினைத் தீர்வுக்காகவும் நிரந்தர அமைதிக்காகவும் பேச்சுவார்த்தை நடாத்திவரும் அரசு- விடுதலைப்புலிகளுக்கு நெருக்கடிகளை உருவாக்கவும், குறிப்பாக ஆயுதமற்ற நிலையில் அரசியல் வேலைகளில் ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகளுக்கும் ஆபத்தை உண்டாக்கும் வகையில் தான் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நெடுந்தீவிற்குச் சென்று பதற்ற நிலையைத் தோறறுவித்துள்ளனர் என்ற சந்தேகமே எழுந்துள்ளது.

ஈ.பி.டி.பி.கட்சியினர் ஆயுதந் தாங்கியிராமல், படைகளுடன் வேலை செய்யாமல் சந்தேகத்திற்கு அப்பால் ஜனநாயக அரசியல் நடத்துவதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்காமலும் இரவோடிரவாக பொலிஸ் காவலுடன், கடற்படையினரின் ஆதரவுடன் நெடுந்தீவுக்குப் படையெடுத்துள்ளதன் நோக்கம் என்ன? நெடுந்தீவுப் பிரதேசத்தில் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலான நடவடிக்கைகளில் ஈ.பி.டி.பி கட்சியினர் நடந்து கொள்ளக் கூடாது. போர் நிறுத்தக கண்காணிப்புக் குழுவின் ஆலோசனைகளுக்கு இணங்கி நடப்பதே உடன் தேவையாயுள்ளது.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்பு உறுப்பினர்களுடனும நெடுந்தீவுப் பொதுமக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்துப் பேசியுள்ளனர். பொலிஸ்- உள்துறை அமைச்சின் குழுநிலை விவாதத்தைப் பகிஷ்கரித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கணகாணிப்புக் குழு யாழ். மாவட்டத் தலைவர் ஒலே புரூண்டம் அவர்களைச் சந்தித்து நெடுந்தீவில் ஏறபட்டுள்ள பதற்றநிலை மோதலை உருவாக்காதவாறு தடுக்கவேண்டிய தன் அவசியத்தை வற்புறுத்தினோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கற்குவியலில் விழுந்து காயம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆஸ்பத்திரி வீதியைப் புனரமைப்பதற்காக, வலி- தெற்கு பிரதேச சபையால்- நீண்டகாலமாக பறிக்கப்பட்ட நிலையிலுள்ள கற்களால் அவ் வீதியால் போக்குவரத்துச் செய்வோருக்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்களை உடன் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியால் சென்ற சி.நாகமுத்து (வயது 56) என்பவர் கற்குவியலுக்குள் தட்க்கி விழுந்து தலையில் காயம் அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (83)

# மறைந்தார் மாண்பு

## பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் சிவபாதசுந்தரம்

யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த கல்விமான்களில் ஒருவரும், தலைசிறந்த ஆங்கில அறிஞருமாகிய சிவபாதசுந்தரம் அண்மையில் காலமானார். அளவெட்டியை பிறந்த இடமாயும், யாழ்ப்பாணம் கலட்டியை வாழ்விடமாயும் கொண்டவர் இவர். அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் ஆரம்பக்கல்வியைப் பெற்று பின்பு மலேசியா நாட்டில் கல்வி பயின்று எம்.ஏ. பட்டதாரியானார். பட்டப்படிப்பை முடித்தபின் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபராகி, பின்பு பாடசாலை பரிசோதகராய் பணியாற்றி, பரமேஸ்வராக் கல்லூரியில் நீண்டகாலம் அதிபராயும் பின்பு வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராயும் பணியாற்றி ஓய்வு பெற்றார். தன் ஓய்வுக்காலங்களில் யாழ்.மாநகர சபை நூலக ஆலோசகராகவும் பல்கலைக்கழக நிர்வாக சபை உறுப்பினராகவும் பணியாற்றினார். புகழ்தேடி ஓடாமல், அஞ்சா நெஞ்சுடன் அடக்கமாய் வாழ்ந்தார். பரமேஸ்வராக் கல்லூரியை சேர்.பொன். இராமநாதனின் கொள்கைக்கு ஏற்ப - சமய, கலை,கலாசார, கல்வி செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்து நடாத்தினார். யாழ். பல்கலைக்கழகம் இவருடைய சேவையைப் பாராட்டி தேகாந்த நிலையில் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

- *சங்கரத்தையூர்,* சி-சபாநாதன்

## பாறையில் மோதிச் சேதமுற்ற மீன்பிடி வள்ளம் கடலில் மூழ்கியது

(வடமராட்சி கிழக்கு)

கடற் தொழிலுக்குச் சென்ற வள்ளமொன்று கற்பாறையில் மோதியதால் கடலில் மூழ்கியுள்ளது.

நேற்று முன்தினம் பொலிகண்டி கடற்பரப்பில் ஏற்பட்ட சம்பவம் பற்றி தெரியவருவதாவது, பொலிகண்டியைச் சேர்ந்த சிவலிங்கம் என்பவருக்குச் சொந்தமான மீன்பிடி வள்ளம் தொழிலுக்காக காலை 5 மணிக்கு 3 பேருடன் சென்றது.

சிறிது நேரத்தில் கடல் கொந்தளிப்பாலும் கடும் காற்று வீசியதாலும் வள்ளம் கட்டுப்பாட்டை இழந்து கற்பாறையுடன் மோதியது. இதனால் வள்ளத்தில் வெடிப்பு ஏற்பட்டு வள்ளத்தினுள் கடல் நீர் புகுந்து , வள்ளம் மூழ்கத் தொடங்கியது. வள்ளத்தினுள் இருந்தவர்கள் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர்.

3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் வள்ளத்தை மீட்டுத் தரும்படி உரிமையாளர் வல்வெட்டித்துறை கடற் தொழிலாளர் சங்கத்தை நாடியுள்ளார். (17), (23)

## சிதம்பரக் கல்லூரியில் கணினி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் அனைத்து மாணவர்க்கும் அட்டவணையிடப்பட்ட வகையில் கணினி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இங்கு ஆண்டு 13 வரை கணினி ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் கல்வியை முடித்துக் கொண்ட மற்றும் தொடர்கின்ற மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இலவச கணினி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகவும் கல்லூரி அதிபர் என். அரியரட்ணம் தெரிவித்தார். (10)

## வலி. தென் மேற்கு பிரதேச சபையின் 68 ச.ச.நிலையங்களுக்கு நன்கொடை

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 68 சனசமூக நிலையங்களுக்கு விரைவில் நன்கொடை வழங்கப்படவுள்ளது.

பிரதேசசபை ஊடாக சனசமூக நிலையங்களின் தலைவர், செயலர்களுக்கு வழங்கப்பட்ட பரிசோதனை அறிக்கைப் படிவம் இது வரை திட்டமிடற் பிரிவுக்கு வந்து சேரவில்லை என்றும்,

இன்று மானிப்பாய் பிரதேசசபை உதவியாளரிடம் அறிக்கைகளை ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

பரிசோதனை அறிக்கைப் படிவம் கிடைக்காதுவிடின் நன்கொடைப் பணம் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## மட்டு. பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலிருந்து...









## கொழும்புத்துறை படைமுகாமைப் பார்வையிட்ட யு.என்.எச்.சி.ஆர் குழுவினர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த- அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரிகள்-அப்பகுதியில் நிலை கொண்டுள்ள படைத்தரப்புடன் கலந்துரையாடி-அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் படை முகாம் பகுதிகளையும் விடியோ ஒளிப்பதிவு செய்துள்ளனர்.

கொழும்புத்துறை பிரதான வீதியிலிருந்து இராணுவம் வெளியேறாததைக் கண்டித்து பொது அமைப்புக்கள் மகஜர் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (60)

## பருத்தித்துறையில் சாயி அவதார நிகழ்வுகள்

பருத்தித்துறை சாயி மந்திர் நிலையத்தால் சாயி பாபாவின் 77 ஆவது அவதார நிகழ்ச்சிகள் 23 ஆம் திகதி நடாத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வில் வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா இணைப்புக் குழுத் தலைவர் இ.வசந்தசேனன் "சுவாமியின் அற்புதங்கள்" எனும் விடயம் தொடர்பாகவும், கலட்டி றோ.த. பாடசாலை ஆசிரியர் சு.சிவமலர் "சாயியின் வழியில்" எனும் விடயம் தொடர்பாகவும் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றுமாறு நிர்வாகக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## சைக்கிளோட்ட போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(இணுவில்)

டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டுறவாளர் அமரர் வீரசிங்கம் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு டிசம்பர் 4 ஆம் திகதி சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ள விரும்புவோர் தத்தம் பிரதேச ப.நோ. கூட்டுறவுச்சங்கங்களின் மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தெரிவித்துள்ளார். (85)

## சுன்னாகத்தில் இரவில் வீடுகளுக்குக் கல்வீச்சு

சுன்னாகம் புகையிரத நிலைய வீதியை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு இரவு நேரங்களில் கற்கள் வீசப்படுகின்றன. மதுபான நிலையங்களை நாடிச செல்லும் இளைஞர் கூட்டமே இந்த அநாகரீகச் செயலைச் செய்கின்றனர் எனக் கூறப்படுகின்றது. (87)

# புதிய பரப்புக்களில் தமிழ் மொழியை வளர்க்க நாம் முனைய வேண்டும்!

## முத்தமிழ் விழாவில் பேச்சு

முத்தமிழுக்கு அப்பால் - விஞ்ஞானத் தமிழ், தகவல் தொழினுட்பத் தமிழ், பத்திரிகைத் தமிழ் என்று புதிய பரப்புக்கள் போற்றி வளர்க்கப் பட வேண்டும் என கல்வியியல் கல்லூரி முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய



முத்தமிழ் விழா விருந்தினர்கள் அழைத்துவரப்படும் காட்சி

ஜேர்மன் தொழினுட்ப ஒத்துழைப்பகத்தின் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி கு.சோமசுந்தரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முத்தமிழ் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட முத்தமிழ் விழா கடந்தவாரம் நடைபெற்றது. உள்ளகப் பயிற்சிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் இவ்விழாவில் பங்கு கொண்டனர்.

விழாவிற்குப் பிரதம விருந்தினராக கலாநிதி.வித்துவான் க.சொக்கலிங்கமும் (குகஸ்ரீ சொக்கன்), சிறப்பு விருந்தினர்களாக தேசிய கல்வி நிறுவகத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி.ஐ.எல்.கினிகேயும், ஜேர்மன் தொழிநுட்ப ஒத்துழைப்பகத்தைச் சேர்ந்த கலாநிதி.கு.சோமசுந்தரம், ந.சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் மன்றத்தலைவர் ஆசிரியப் பயிலுநர் ரி.செந்தில்குமரன் தலைமையில் விழா நடைபெற்றது. முத்தமிழ் மன்றக் காப்பாளர் செல்வி.நிர்மலாதேவி நல்லையாவின் வாழ்த்துரையுடனும் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி.தி.கமலநாதனின் ஆசியுரையுடனும் நடைபெற்ற விழாவில், பங்குபற்றிய சிங்களப் பெண்மணிகளும் நெற்றியில் திலகமிட்டு, மாலை சூடி மேடையில் அமர்ந்திருந்த காட்சி அனைவரையும் உணர்வுபூர்வமாக மிகக் கவருவதாகக் காணப்பட்டது.

பிரதமவிருந்தினர் கலாநிதி. வித்துவான் க.சொக்கலிங்கம் தமது உரையில், இளம் சந்ததியினர் முத்தமிழ் விழாவை அவ்வப்போது எடுப்பதோடு நின்றுவிடாது, தமிழினம் கட்டிக்காத்து வளர்த்து வந்த பாரம்பரியங்களையும், கலாசார விழுமியங்களையும் அன்றாட வாழ்விற் கடைப்பிடித்து அவற்றைப் பாதுகாக்க முன் வரவேண்டும். இதற்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஊன்று களமாக அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் திருமதி ஐ.எல்.கினிகே தமதுரையில், உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்ட ஆசிரியமாணவர்களின் திறமைகளை உறுதிப்படுத்தும் விழாவாக இம்முத்தமிழ் விழா மிளிர்கின்றது எனக் குறிப்பிட்டார்.

ஜேர்மன் தொழினுட்ப ஒத்துழைப்பகத்தின் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி.கு.சோமசுந்தரம் தமது உரையில் - இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கு மட்டுமன்றி, காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு வருங்காலத்தில் விஞ்ஞானத் தமிழ், தகவல் தொழினுட்பத்தமிழ், கணினித் தமிழ், பத்திரிகைத் தமிழ் எனத் தமிழ் வளர்ந்து செல்லும் புதிய பரப்புகள் எல்லாம் போற்றி வளர்க்கப்பட வேண்டியவை எனக் குறிப்பிட்டார்.

(83)

## எங்கே போகிறோம்...?

நேசன்

### நம்மவர்களும் - இலக்கிய ரசனையும்

இப்பொழுதெல்லாம் அடிக்கடி இலக்கியக் கூட்டங்கள் நூல் வெளியீடுகள் விழாக்கள் என நடைபெறுகின்றன. சந்தோஷமான விஷயம். எழுதுபவர்கள்~வாசிப்பவர்கள்~விமர்சிப்பவர்கள் ~ ரசிப்பவர்கள் ~ ரசனையைப் பகிர்ந்து கொள்கிறவர்கள் எனப் பல வகையிலும் புதிது புதிதாய் ஆட்கள் அதிகரிப்பதைப் பார்க்கவே ஒரு ஆறுதல் கிடைக்கிறது.

எம்மவர்களின் ஆக்கங்கள் நூலுருப்பெற்றுக் கைகளுக்கு வரும்போது பெருமிதமாயிருக்கிறது. இத்தகைய விஷயங்கள் எழுதுபவர்களுக்கும் அவர்களுக்கு அறிமுகமான நண்பர்களுக்கும் சிறிய எண்ணிக்கையிலான வாசகர்களுக்கும் மாத்திரம் உரியனவா?

வெளியீடு ஒன்றை ஒழுங்கு செய்து விழா ஏற்பாடு செய்து அழைப்பிதழ் தயாரித்துப் பெயரை அச்சிட்டு அழைக்கப்பட்டவர்களும் கூட ஒரு விழாவைப் புறக்கணிக்கிறார்கள்~அல்லது 'கண்டுகொள்ளாமல்' இருக்கிறார்களென்றால் அதன் பொருளென்ன?

அழைக்கப்பட்டவர்கள் பொருத்தமற்றவர்கள் என்பதா? அழைத்தவர்களில் உள்ள குறைபாடு என்பதா? எழுதுவது, வெளியிடுவது என்பதெல்லாம் எழுத்து முயற்சியிலீடுபட்டுவரும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலுள்ளவர்களுக்கும், 'வேலை மினக்கெட்டு' அதையெல்லாம் வாசிப்பவர்களுக்கும், அத்தகைய காரியங்களில் அர்த்தம் இருப்பதாய்க் கருதிக்கொண்டு விழாக்களுக்கு வருபவர்களுக்கும் மாத்திரம் உரியன என்று கருதும் 'அறியாமை' எம்மவர் மத்தியில் வேர் கொண்டு விட்டதா? யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அண்மையில் இடம்பெற்ற பத்து நூல்களின் அறிமுக மற்றும் வெளியீட்டு விழா ஒன்றில் அவதானிக்க நேர்ந்தவைகளை இங்கு குறிப்பிட வேண்டும். இத்தகைய நிகழ்வுகளில் மேடையில் அமரக் கிடைத்தால் மாத்திரம் விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் கலந்து கொள்கிறார்கள் என்றும் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளும் தன்மை அத்தகையோரிடம் ஏன் இல்லை? என்றும் கேட்கப்பட்டமை ~ கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. அதுபோலவே இத்தகைய இலக்கிய, தமிழ் நிகழ்ச்சிகளில் கலைத்துறை சார்ந்தோரே கலந்து கொள்ள, ஏனையோர் அவை தமக்குத் தொடர்பற்ற விடயங்கள் என்று ஒதுங்கி விடுவதும் பொருத்தமுடையதாகுமா என்னும் வினாவும் முன்வைக்கப்பட்டது.

வாசிப்பு, நூலாக்கம் என்பவற்றில் ஆர்வமுள்ள, ஊக்குவிக்கும் மனப்பாங்கு கொண்ட ஒரு பெரியவர், தமது பிரிவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நூலகம் ஒன்று நடாத்தப்பட்டு வருவதாகவும், வாசிப்பை ஊக்குவிப்பதற்காகவும் போட்டியொன்று வைத்துப் பரிசளித்ததாகவும் தெரிவித்து, அத்தகைய பரிசு நூலொன்று உயர்தரத்தில் கணிதம் கற்கும் மாணவனுக்கு வழங்கப்பட்ட போது, அம்மாணவனின் தந்தையார் (கல்வித்துறையுடன் தொடர்புடைய ஒருவர்) வழங்கப்பட்ட இலக்கிய நூலால் தனது மகனுக்கு என்ன பயனென்று வினவி, கணிதத்துடன் தொடர்புள்ள நூலொன்றை வழங்கியிருக்கலாமே என்றும் ஆலோசனை தெரிவித்ததாகச் சொன்னார் ~ எம்மவர்களின் இலக்கிய, மற்றும் வாசிப்புத்தரம் இருக்கும் நிலை பற்றிய அவரது மெய்யான அக்கறையும் ஆதங்கமும் ஒருவித அறுதலைத்தந்தன.

எழுத்தாளர்கள் அல்லாத ~ வாசித்தலை ஒரு ஒழுங்கான கிரியையாக மேற்கொள்ளும் தீவிர ~ தரமான வாசகர்கள் அல்லாத ~ இலக்கியத்தை எழுத்தை நேசிக்கும் இதயம் படைத்தோரல்லாத வேறு எவரும் இத்தகைய நிகழ்ச்சிகளை ~ நூல்களை ஏறெடுத்தும் பாராத நிலைமை இன்னமும் தொடரப் போகிறதா? இது ஒரு ஆரோக்கியமான நிலை என்று கருதலாமா? இவையெல்லாம் அர்த்தமில்லாதவை என்று தள்ளி வைத்து விடுவதே ஒரு 'மேதாவித்தனம்' என்று கருதும் அறியாமையை நாம் எத்தனை நாட்கள் கொண்டாடப்போகிறோம்?

நம்மவர்களைத் தீவிரமான இலக்கிய ரசனையை வளர்த்துக் கொண்டு தேடித்தேடி நல்ல இலக்கியங்களைப் படியுங்கள் என்று யாரும் கேட்கவில்லை (அதற்கு ஒரு பக்குவம் வேண்டும்). வாசித்தல் என்ற பொதுக்கிரியை கூட எந்த அளவுக்கு இன்று மேற்கொள்ளப்படுகிறது, வளரும் பிள்ளைகள் ஏதாவது வாசிப்பதைக்கண்டால் 'சும்மா அதையிதை வாசித்து, நேரத்தை வீணாக்காமல் புத்தகத்தை எடுத்துப்படி' என்று புத்திமதி (?) சொல்லும் பெற்றோர்கள் இன்று அனேகம். இத்தகைய வாசிப்புப் பழக்கம் அற்றுப்போய் விடுவதாலும் பாடசாலையின் தமிழ்க் கற்பித்தலை மட்டும் அல்லது தனியார்கல்வி நிலையக் கற்பித்தலை மட்டும் நம்பிப் பரீட்சை எழுதுவதால்தான் ~ தமிழ் எழுதுவதால் தான் நமது பிள்ளைகளின் மொழித்தரம் மிகவும் வீழ்ச்சிகண்டு வருகிறது என்பதை நாம் உணரவேண்டும்.

(பல்கலைக்கழக மட்டத்தில் கூட எழுத்துப்பிழை, சொற்பிழை, பொருட்பிழை மலிந்து கிடப்பதாக அண்மைக்காலத் தரவுகள் சில எடுத்துக்காட்டுகின்றன) 'பிழையற எழுதுதல்' என்பதே கேள்விக்கிடமாகும்போது தரமாக எழுதுதல் செழுமையான மொழி என்கிற விஷயங்கள் பற்றி பேச முடியுமோ?

மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அறவே அற்றுப்போய் விடுமோ... பாடநூல்களைப் பயில்வதும் நெட்டுருப் பண்ணுவதும் தவிர மொழியின்பத்துக்காக இலக்கிய ரசனைக்காக வாசிக்கும் பழக்கம் இல்லாது போய்விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இதில் மிகப் பெரிய சோகமான விஷயம் என்னவென்றால் ~ க.பொ.த.உயர்தரத்துக்கு தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் கூட வாசிப்பு ~ இலக்கியப் பரிச்சயம் என்பன அற்றோராக இருப்பதுதான் ~ கேட்டால் இதற்கெல்லாம் எங்கே நேரம்...? என்கிறார்கள். ~ பாவம் பிள்ளைகள் பிரத்தியேக கல்வி நிலையத்து குறிப்புக் கொப்பிகளையே பூசித்து ~ வாசித்துப் பரீட்சை எழுதும் அவலமான தலைவிதி அவர்களுக்கு.

வாசிக்கும் பழக்கமே இல்லாதவர்களைக் கேட்டால் ~ இதிலெல்லாம் என்ன லாபம் என்று கேட்கிறார்கள்? அவர்கள் எதையுமே ரூபா சதத்தில் கணக்குப் பார்க்கிற வட்டிக்கடை முதலாளிகள் போலச் செயற்படுவதால் வாசிப்பின் அருமையைப் புரியவைப்பது கடினமாக இருக்கிறது. அண்மையில் ஒரு அம்மா கேட்டார், எழுதினால் காசு தருவினமோ....இல்லையென்றால் பிறகேன் எழுதுவான்?

மிக அண்மையில் நூலக வாரம் பாடசாலைகளில் கொண்டாடப்பட்டது. நோக்கம் நல்லது நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை என அறிவுறுத்தப்பட்ட நடவடிக்கைகளும் நல்லவை, பாராட்டப்படவேண்டியவை ~ ஆனால் உண்மையில் நடந்ததென்ன...? பல பாடசாலைகளில் அலுமாரிகளில் இருந்த புத்தகங்களைத் தூசிதட்டி மேசைகளில் அடுக்கி மாணவர்கள் வரிசையாகச் சென்று பார்த்து வர அனுமதிக்கப்பட்டார்கள் என அறிய முடிகிறது. எத்தனை பாடசாலைகள் (ஆசிரியர்,அதிபர்கள்) வாசிப்பை வலியுறுத்துகிறார்கள்? எத்தனை ஆசிரியர்கள் நூல்களின் அருமையை, ருசியை மாணவர்களுக்கு இனம் காட்டியிருக்கிறார்கள்? ஒரு நல்ல படைப்பைப் படித்து அதனூடாகத் தன்னை ~ தன்வாழ்வின் அம்சங்களை இனம் கண்டு வாழ்வின் விகசிப்பை ~ அர்த்தத்தை புரிந்துகொள்ளும் பாக்கியம் எத்தனை பிள்ளைகளுக்குக் கிடைக்க போகிறது? காசு பண்ணவும் இலாபம் தேடவுமே நாம் பிள்ளைகளைத் தயார் செய்யப்போகிறோமெனில் இதயமுள்ள மனிதர்களின் எண்ணிக்கை பெருமளவால் வீழ்ச்சி கண்டுவிடும்!

நாம் எங்கே போகிறோம்...?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD
CES
உங்களின் பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்கு கணினித்துறையில் அத்திவாரமாக அமைய வேண்டின் எங்களுடன் தொடர்பு கொள்க
மேலும் சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், கொம்பியூட்டர் Games, மற்றும் விசேட வகுப்புக்க்ள்.
விண்ணப்ப முடிவு திகதி: 15.12.2002
Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Opposite of J/Hindu Primary)
(சி-158)

# யாழ்.மாவட்டத்தில் 83ஆயிரம் பேர் வேலைகள் ஏதுமற்ற நிலையில்!

யாழ்.மாவட்டத்தின் வேலையற்றோர் தொகை 83,061 என யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்ட புள்ளிவிபர ஆய்வில் தெரியவந்துள்ளது. இது யாழ்.மாவட்ட சனத்தொகையில் 28 வீதமாக இருக்கிறது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளும் ஆறு வட்டங்களாக பிரிக்கப்பட்டன. ஆறு வட்டங்களிலும் 50 கிராம சேவையாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன. இங்கு தொழில் ஏதுமின்றி இருப்போர் 83,061பேர் எனவும், தொழில் கீழுழைப்பில் உள்ளோர் 1,11,172 எனவும், தொழில் செய்வோர் 1,04,659எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வேலையற்றோர் தொகை வருமாறு- நெடுந்தீவு - 680, வேலணை - 636, ஊர்காவற்துறை - 1662, யாழ்ப்பாணம் - 6758, நல்லூர் - 7881, சண்டிலிப்பாய் - 18837, சங்கானை - 10067, உடுவில் - 4331, தெல்லிப்பளை - 1448, கோப்பாய்-6169, சாவகச்சேரி - 10470, கரவெட்டி - 6220, பருத்தித்துறை-6552, மருதங்கேணி - 1350

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய சனத்தொகை - 5,38,660 ஆகும். இதில் பொருளாதார முயற்சியில் ஈடுபடுவோர் 3,93,797பேராகும்.



நேற்று பல்கலைக்கழக மாணவன் நெடுந்தீவில் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் சமர்ப்பிக்கத் திரண்டு சென்ற ஆயிரக்கணக்கான மாணவர்களைப் படத்தில் காணலாம்.

## நுணாவிலில்
# மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன

அண்மையில் நுணாவில் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இரு எலும்புக் கூடுகளும் கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற ஷெல் வீச்சில் கொல் லப்பட்டவர்களுடையதென அவர்களது உறவினர்களால் அடையாளங் காணப்பட்டது.

கடந்த சனிக்கிழமை யாழ்.சட்ட வைத்திய அதிகாரி மற்றும் சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் இந்த எலும்புக் கூடுகள் புதைகுழியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டன. இதன்போது சடலங்களுடன் புதைக்கப்பட்ட சாரம், சேட் என்பவற்றைக் கொண்டு இச்சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

நுணாவிலைச்சேர்ந்த சண்முகம் கார்த்திகேசு, சின்னட்டி கோபால பிள்ளை ஆகியோரின் சடலங்களே இவையாகும். நுணாவில் மேற்கு கிராம அலுவலர் வை.துரைசிங்கம் பொலிசாரின் உதவியோடு சாட்சியை நெறிப்படுத்தினார். பின் எலும்புக் கூடுகள் இரசாயன பகுப்பாய்விற்கு கொண்டு செல்லப்பட்டன. (34)

# புனர்வாழ்வு அபிவிருத்தி; இன்று செயலகத்தில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் எதிர்கால புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான விசேட மாநாடு இன்று யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இவ்விசேட மாநாட்டுக்கு அனைத்துப் பிரதேச செயலர்களும், திணைக்களத் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். காலை 10 மணியளவில் ஆரம்பமாகும் இம்மாநாட்டின்போது ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான விபரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாகவும் தகவல்கள் திரட்டப்படவுள்ளன.எதிர்காலத்தில் யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி சார்ந்த செயற்திட்டங்களைத் தயாரிப்பதற்கான முன்னோடி ஏற்பாடகவே இம்மாநாடு, நடாத்தப்படவுள்ளது. (க)

## மருதனார்....

விட்டுக் கொடுக்க வீதியின் ஓரத்துக்குச்சென்றபோது குடைசாய்ந்தது. தோட்டக்காணி ஒன்றினுள் பெற்றோல் வழிந்தோட ஆரம்பித்தது. இதனால் தனது தோட்டநிலம் பல வருடங்களுக்கு செய்கை பண்ணமுடியாத நிலைக்கு வந்துள்ளதாக காணி உரிமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று மாலை 6 மணியளவில் பருத்தித்துறை இறங்கு துறையிலிருந்து வந்த லொறி ஒன்று மாலுசந்தியருகே ரெலிகொம் நிறுவனத்தினரால் தோண்டப்பட்ட குழி ஒன்றினுள் புதைந்தது. (82,84,111,12)

## நெடுந்தீவில்....

இங்கு குறிப்பிடத்தக்கது. இவரது இடத்திற்கு புதிய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்

இதனிடையே நேற்றும் மேலதிகமான கடற்படையினர் நெடுந்தீவு வந்து சேர்ந்துள்ளனர். நெடுந்தீவில் சமரச முயற்சியில் ஈடுபட்டிருந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்பினர். எனினும், இவர்கள் மீண்டும் இன்று நெடுந்தீவு சென்று நிலைமைகளை அவதானிப்பர் என கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தன. நெடுந்தீவு விவகாரத்தை அப்பகுதி மக்களே தீர்த்து வைக்க வேண்டுமென கண்காணிப்புக் குழுவினர் தரப்பில் கூறப்பட்டது. (112)

## ஸ்ரீதர்...

இதேவேளை, நெடுந்தீவுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருப்பதால் அங்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் உணவுவகைகளைச் சேகரித்து அங்கு அனுப்புவதெனவும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (113)

## மாவீரர்....

வடமராட்சியில் என்னன் குளம், தென்மராட்சியில் கொடிகாமம், வலிகாமத்தில் கோப்பாய் ஆகிய பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் புனரமைக்கப்பட்டு புதுமெருகூட்டப்பட்டுள்ளன. தீவகத்தில் உள்ள சாட்டியில் நேற்று புதிய மாவீரர் துயிலும் இல்லம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு நேற்று தேசியக்கொடி ஏற்றப்பட்டுள்ளது. மேலும் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் விசேட அலங்கார வளைவுகளும், பந்தல்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பல இடங்களில் சிரமதானப் பணிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இம்மாவீரர் வாரத்தின் இறுதி மூன்று நாட்களும் மாவீரர் நாட்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. இருபத்தைந்தாம் திகதி காலை 8.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றிவைக்கப்படும். அத்துடன் கிராம மட்டத்தில் மாவீரர்களின் பெற்றோரை கௌரவிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருபத்தியேழாம் திகதி மாலை தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை ஒலிபரப்பப்படும். இவ்வுரையைத் தொடர்ந்து மாலை 6.05 மணிக்கு அனைத்து ஆலயங்களின் மணிகளும் அடித்து மணியோசை எழுப்பப்படும். 6.06 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்படும். தொடர்ந்து 6.07 மணிக்கு அனைத்து வீடுகளிலும் நிறுவனங்களிலும் ஈகச்சுடர் ஏற்றப்படும்.

## மட்டு ...

23 ஆவது பிரிவு கட்டளைத் தளபதி எஸ்.ஆர்.பாலசூரிய, பிரிகேடியர் ஈ.சந்திரவம்ச, கேணல் ஈ.பி.ஆர்.டி. சில்வா, விமானப்படை குறூப் கப்டன் கோலித குணதிலக, பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.லியனகே ஆகியோரும் - மற்றும் அரச அதிகாரிகள் தரப்பில் அரச அதிபர் மோனகுருசாமி, திட்டப் பணிப்பாளர் தயாபரன், பிரதேச செயலர்களான புண்ணியமூர்த்தி, தௌபர், சிறிசங்கர், உதயகுமார் ஆகியோரும் -

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தரப்பில் அட் நிசார் வாஸ், பேச்சாளர் ஹெல்டர் ஹெல்சன் உட்பட 9 பேர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் - இராணுவம் பொதுக்கட்டடங்கள், தனியார் கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்து விலக வேண்டும், வீதித்தடைகளை அகற்றுதல் வேண்டும் என்ற கோரிக்கைகள் விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டன.

அத்தோடு காத்தான்குடி மஞ்சன் தொடுவாய் பகுதியில் தமிழ்-முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வது குறித்தும் மட்டக்களப்பில் முஸ்லிம், தமிழ் மக்கள் மீளக்குடியமர்வது குறித்தும் எதிர்வரும் சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்தின் ஆலடிவேம்பில் கூடி ஆராய்வது எனவும் நேற்றைய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது. (06)

# கிளிநொச்சியில் நடைபெற்ற புலிகளின் குரல் ஆண்டுவிழா



போராளி ஒருவருக்குத் தலைவரின் பரிசினை வழங்கும் புலித்தேவனை மேலேயுள்ள படத்திலும், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் உரைநிகழ்த்துவதை உட்படத்திலும் காணலாம்.

(கிளிநொச்சி நிருபர்)

புலிகளின் குரல் வானொலியின் 12வது ஆண்டு நிறைவு விழா நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மத்திய மைதானத்தில் புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. ஈகச்சுடரை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றினார். தொடர்ந்து மாவீரர் நினைவுப்பாடலும் மங்கள இசையும் இடம்பெற்றன.

புலிகளின் குரல் பிரதம செய்தியாசிரியர் தி.தவபாலன் வரவேற்புரையாற்றினார். தலைமையுரையை புலிகளின் குரல் பொறுப்பாளர் நா. தமிழன்பன் நிகழ்த்தினார். விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் சிறப்புரையாற்றினார்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் சான்றிதழ்களும், பரிசுகளும் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவனால் வழங்கப்பட்டன. தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

# காலை பத்து மணி வரையில் மூடப்பட்ட வர்த்தக நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரை வெளியேறும்படி கோரி நெடுந்தீவு மக்கள் நடாத்தி வரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை 10 மணிவரை வர்த்தக நிலையங்கள் யாவும் திறக்கப்படாமல இருந்தன.

யாழ்ப்பாண வெகுஜன ஒன்றியங்களும், பொது அமைப்புக்களும், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன இணைந்து இப்போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தன.

நேற்றுக்காலை 10 மணிவரை யாழ்.நகர வர்த்தக நிலையங்கள் உட்பட பல வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாமல் இருந்தன.

அத்துடன் சில அரசாங்க செயலகங்களும் இயங்காமல் இருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, வடமராட்சிப் பகுதியில் நேற்றுக்காலை 10மணி வரையும் பூரண ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது வடமராட்சி பிரதேசத்தில் உள்ள சகல வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டு இருந்ததுடன் வடமராட்சிக்கும் ஏனைய இடங்களுக்குமான போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறவில்லை. (15,லி)

## கண்காணிப்பு அலுவலகத்தில்
# வீதிகள் திறப்பு தொடர்பாக ஆராய இன்று விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தடைசெய்யப்பட்டிருக்கும் வீதிகள் தொடர்பாகவும், மீன் பிடிக்கட்டுப்பாடுகளைத் தளர்துவது தொடர்பாகவும் ஆராய்வதற்கென இன்று விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அரசதரப்பில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட உட்பட இரு பிரதிநிதிகளும் புலிகள் தரப்பில் யாழ்.அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட இரு பிரதிநிதிகளும் பங்குபற்றவுள்ளனர்.

இன்றைய கூட்டத்தில் நாகர் கோவில் வீதி திறப்பது குறித்து மிக முக்கிய முடிவு எட்டப்படும் என்று நம்பப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.